விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com




சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 25 திங்கட்கிழமை (10.08.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 234

# ஜனாதிபதியுடன் இணைந்து ரணிலுக்கு எதிராக போர்!






## மகிந்த சூளுரை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சவால் விடுக்கும் உத்தேசம் கிடையாது. அவருடன் இணைந்து பிரதமர் ரணிலுக்கு எதிராகப் போராட்டத்தை முன்னெடுப்பேன் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனது ஒரே பிரதிவாதி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவேயாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு சவால் விடுக்கத் தயாரில்லை.

மீண்டும் சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியைப் பெற்றுக்கொள்ளும் அவசியமில்லை. சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக கடமையாற்றியவர் ஜனாதிபதியாக

23 ஆம் பக்கம் பார்க்க
















நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



"வெற்றி நிச்சயம்"
இறுதி நேரத்தில் வந்துவிட்டது

# தரம் - 05
# 2015

23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு

**முற்றிலும் எதிர்பார்க்கக் கூடிய மாதிரி**

**வினாத்தாளும் விடையும்**

கிடைக்கும் புத்தகசாலைகள்

- ★பூபாலசிங்கம் (யாழ்ப்பாணம்) - 0212226693
- ★லக்ஷ்மி (யாழ்ப்பாணம்) - 0212224375
- ★சித்தி விநாயகர் (சுன்னாகம்)
- ★பாக்யா (கொக்குவில்)
- ★சாரங்கன் (யாழ் இந்து மைதான அருகாமை)
- ★வர்ணா (கிளிநொச்சி மத்திய சந்தை அருகாமை)- 0773711516
- ★பொதிகை (தனங்கிளப்பு, சாவகச்சேரி)
- ★அறிவுதி (கனகபுரம் வீதி, கிளிநொச்சி) -0776737535
- ★அன்னை (யாழ்ப்பாணம்) - 0212229881
- ★துர்க்கா (சுன்னாகம்) - 0212240009
- ★Book lap (பல்கலைக்கழகம் அருகில்)
- ★மகுடம் (இணுவில்)
- ★மோகன்ஸ் (பளை) - 0778176476
- ★அருள்நாயகி (கொடிகாமம்) - 0774068051
- ★மொடோன் (நெல்லியடி) - 0214901519
- ★கலாஜோதி, கலைமகள் (சங்கானை)
- ★பூபாலசிங்கம் புத்தகசாலை (கொழும்பு.11) - 0112422321

ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் கவனத்துக்கு!

திருட்டுத்தனமாக போட்டோ கொப்பி அடித்து வினாத்தாள் விற்பனை செய்வதால் வினாத்தாளில் உள்ள படங்கள் தெளிவில்லாமல் இருக்கின்றது. இதனால் மாணவர்கள் முழுப்பயனை அடைய முடியாமல் உள்ளது. நீங்கள் விழிப்பாக உண்மைப் பிரதியை மேல் காணும் புத்தகசாலையில் பெற்றுக் கொள்ளலாம்.

(C-1781)

கொழும்பு எக்ஸ்பிறஸ் வெளியீடு

T.P :- 075 041 0034 , 077 844 8763
077 593 7166



## சேவைகள்

அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, லண்டன், நோர்வே, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கான ONLINE படிவங்களும் செங்கன் நாடுகளான பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், சுவிடன், இத்தாலி (சகல செங்கன் நாடுகளுக்கும்) நிரந்தர விசா, தற்காலிக (விசிட்) விசா விண்ணப்ப படிவங்களும், சத்தியக் கடதாசி வேலைகளும், முறையாகவும், சரியாகவும் பூர்த்தி செய்து தரப்படும்.

வேலை நாட்களில் காலை 7.30இல் இருந்து மாலை 4.30வரை எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: திருமதி K.ஞானேஸ்வரி ஜே.பி (அகில இலங்கை)
செக்கிரறேரியல் சேவிஸ்
S-68,3-வது மாடி,
கொழும்பு கோல்ட் சென்ரர்,
(பழைய மாலுக்கடை)
கொழும்பு 11.

தொலைபேசி: 011 3133851 / 011 3133945 / 077 3753791
இமெயில்: gnaneswaryk@gmail.com


# கூட்டமைப்பு எதிர்ப்பு

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் கல்முனை நகரிலுள்ள வீதியொன்றுக்கு எம்.எஸ் காரியப்பரின் பெயரை அனுமதியின்றி சூட்டியதாக குற்றஞ்சாட்டிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களும் ஆதரவாளர்களும், பகிரங்கமாக வீதியின் பெயரிடப்பட்ட கல்வெட்டை இடித்து தரைமட்டமாக்கியுள்ளனர்.

நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளும் தேர்தல் பிரசார கூட்டமொன்று சாத்தான்கேணி மைதானத்தில் நடைபெறுவதற்கு ஒரு சில மணித்தியாலயத்துக்கு முன்னதாக இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இரவோடு இரவாக குறித்த வீதிக்கு இந்த பெயரிடப்பட்டுள்ளதாக மாநகர சபை மேயருக்கு எதிராக தமிழ்த் தரப்பினரால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு, அவருக்கு எதி ராக கல்முனை நகரில் தமிழ் மக்கள் கலந்து கொண்ட ஆர்பாட்டமொன்றும் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தின் பின்னரே குறித்த வீதியின் பெயரிடப்பட்ட கல்வெட்டு இடித்து தரை மட்டமாக்கப்பட்டுள்ளது.(எ-12)

## துயர் பகிர்கின்றோம்



### அமரர் அன்னலிங்கம் குமாரசாமி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி சரளா ஜெயக்குமார் அவர்களின் பாசமிகு தந்தையார் அன்னலிங்கம் குமாரசாமி 07-08-2015 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், மானிப்பாய்.

(1451)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603



## நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு

**"எமது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் (TNA) மதிப்பிற்குரிய சம்பந்தன் ஐயாவின் உரையின் படி எமது கௌரவ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினாலேயே தமிழராகிய எமக்கு அனைத்தும் பெற்றுக் கொடுப்பேன்" என்பதற்கமைய அதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நேரடி வேட்பாளராக இன்று நான் அங்கஜன் இராமநாதன் .......**

நாம் வந்த பாதை பெருமிதமான வரலாற்றைக் கொண்டது
நிகழ்கால நிலைவரம் எதிர்பாராத அரசியல் மாற்றத்திற்கு முகம் கொடுத்து அதன் மாற்றத்திற்கான மாற்றமே நாம் இன்று எதிர் பார்ப்பது.
நட்புறவான தேசிய ஒருங்கிணைவுடனான பொருளாதார முகாமைத்துவத்துடன் கூடிய நவீன உட்கட்டமைப்புவசதியுடன் சுதந்திரமாக வாழக்கூடிய வட மாகாணமாக்கி
விவசாயம், நெல் மற்றும் மரக்கறி பயிர்ச்செய்கை, தெங்கு பயிர்ச்செய்கையின் போது
வினைத்திறனை அதிகரிப்பதற்கு புதிய தொழிற்பயிற்சியுடன், கால்நடை வள அபிவிருத்தி, கைத்தொழில் வள அபிவிருத்தி என வியாபார கேந்திர நிலையமாக அறிமுகப்படுத்துவோம்.
வடமாகாணத்தில் அதிகளவான அன்னியச் செலாவணியை பெற்றுத் தருகின்ற சுற்றுலாவுக்கான பரந்தவெளி,
ஆடைக் கைத்தொழிலை ஆரம்பிப்போம்.
பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதற்கு சிறிய வியாபாரம், சுயதொழில் மற்றும் தனியார்துறையை ஊக்குவிப்போம்.
அனைவரின் வளமான வாழ்விற்குமான வீட்டுத்திட்டம்.
சிறந்த கல்விக் கொள்கை, ஆரோக்கியமிக்க சுகாதாரக் கொள்கை மற்றும் சுற்றுச் சூழல் மரம், செடி, கொடிகளை பாதுகாப்போம்.
கலைகளால் கலாசாரங்கள் மற்றும் உணர்வுர்வமான சமூகத்தை அர்ப்பணிப்போடு கட்டியெழுப்புவோம்.
துடிதுடிப்பு மிக்க ஆரோக்கியமான மற்றும் ஆளுமைமிக்க இளைய சமுதாயத்தை கட்டியெழுப்புவோம்.

வட மாகாணத்தில் மகளிர், சிறுவர் மற்றம் குழந்தைகள் 24 மணி நேரமும் பாதுகாப்பாக பயமின்றி எந்த இடத்திலும் வாழ்வதற்கும் பயணிக்கக்கூடிய வாழ்வினை ஏற்படுத்த வழி வகை செய்வோம்.
**சகல உட்கட்டமைப்பு வசதிகளுடன் உயர்ந்தெழுகின்ற மாகாணங்களில், வெல்லும் எமது நாளைய சிறந்த வட மாகாணமாக மாற்றுவோம்.**

(சீ - 433)

X 1



**அங்கஜன் இராமநாதன்**
(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்)

**புதிய நாடு – புதிய தலைவர் – புதிய தலைமுறை – புதிய எதிர்பார்ப்பு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# ரணிலின் அமைச்சரவையை எதிர்பார்க்கும் மைத்திரி

## உணர்ச்சிகரமான உரைமூலம் வெளிப்படுத்தினார்



(கொழும்பு)

**நடைபெறவுள்ள தேர்தலுக்குப் பின்னர் தற்போதைய அமைச்சரவையையே சந்திக்க வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தற்போதைய அமைச்சரவையின் இறுதிக் கூட்டத்திலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் தற்காலிக அரசாங்கமும் அதன அமைச்சரவையுமே பதவியில் இருக்கின்றது.

இந்த அரசாங்கத்தின் இறுதி அமைச்சரவைக் கூட்டம் கட்ந்த வாரம் கூடியது.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது.

தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ளதால், அமைச்சர்கள் பலர் இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. சிலர் மாத்திரமே சமுகமளித்திருந்தனர்.

அமைச்சரவைப் பேச்சாளர் என்பதால், அமைச்சர் ராஜித சேனாரத்ன தொடர்ந்தும் அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்று வந்தார்.

23ஆம் பக்கம் பார்க்க....

# யுத்த வெற்றிகளுக்கு பலரின் பங்களிப்பு உண்டு

## மகிந்த மட்டும் அல்ல என்கிறார் சந்திரிகா



(குருநாகல்)

'யுத்தத்தை வென்றெடுத்தார் என்ற காரணத்துக்காக மட்டும் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு தொடர்ச்சியாக மக்கள் வாக்களிக்க முடியாது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே

23ஆம் பக்கம் பார்க்க....

# தபால் மூல வாக்களிப்புக்கு மேலும் இரு நாட்கள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தபால்மூலம் வாக்களிக்கத் தவறிய வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு மேலும் இருநாட்கள் தேர்தல் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தபால்மூலம் வாக்களிக்கத் தவறியோர் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை வாக்களிக்க முடியும்.

அத்துடன் க.பொ.த உயர்தரப் பரீட்சைக் கடமைகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அலுவலர்கள் பரீட்சைக் கடமைகள் காரணமாக வாக்களிக்க தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 முதல் 11.30 மணிவரை சந்தர்ப்பம் வழங்குவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தேர்தல் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9,12)

# அரசுடன் ஆதாரங்களை பகிர்ந்து கொள்ளத் தயார்

## மனித உரிமை ஆர்வலர் யஸ்மின் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தம்மிடம் உள்ள ஆதாரங்களை அரசாங்கத்துடன் பகிர்ந்து கொள்ள தயார் என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் தலைவி யஸ்மின் சூக்கா அறிவித்துள்ளார்.

இந்தநிலையில் தமது அறிக்கையில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் விசாரணைகளை மேற கொள்ள வேண்டும் என்றும் சூக்கா கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன றுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பிய பேட்டியில் அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இதற்காக இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட தயார் என்றும் சூக்கா குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந்த விடயம் மிகவும தீவிர நிலையை ஏற்படுத்தும் விடயம

23ஆம் பக்கம் பார்க்க....

# அரசியல் கைதிகள் எவரும் தற்போது சிறைகளில் இல்லை

## விஜேதாஸ தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் அரசியல்கைதிகள் என்று எவரும் கிடையாது என்று நீதி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளருமான விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவே இறுதியாக தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதி எனவும், அவர் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளமையினால் அரசியல் கைதி எவரும் சிறைகளில் இல்லை எனவும் அவர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

போர் காலத்தில் கைது செய்யப்படடவர்கள் கூட வெடிகுண்டு வைத்தல், கொலை செய்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்பட்டவர்கள் என தெரிவித்துள்ள அமை

23ஆம் பக்கம் பார்க்க....

# மகிந்தவை ஆதரிக்குமாறு அதிகாரிகளுக்கு அழுத்தம்?

(கொழும்பு)

தேசிய புலனாய்வு பிரிவின் முன்னாள் பிரதானி கபில ஹெனந்தாவிதாரணவினால் புலனாய்வு பிரிவு அதிகாரிகளிடம் குருநாகல் மாவட்ட வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குமாறு அழுத்தம் கொடுத்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளன.

இந்நாட்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல மாவட்ட வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் நடவடிக்கைகளின போது கபில ஹெனந்தாவிதாரண, மாவட்டத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள புலனாய்வு பிரிவு அதிகாரிகளைத் தனிப்பட்ட ரீதியில் சந்தித்து அவர்களின் ஆதரவுகளை மகிந்த ராஜபக்ஷவுக்கு பெற்று கொடுப்பதற்கு முயற்சித்து வருகின்றார்.

எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இணைந்த முன்னணி அரசாங்கம் ஒன்று உருவாக்கப்படும் எனவும், அதன் பின்னர் இதற

23ஆம் பக்கம் பார்க்க....

# தேர்தல் முறைப்பாடு 1199 பதிவு

தேர்தல் சட்ட மீறல்கள் குறித்து ஆயிரத்து 199 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

அரச வளங்களை முறையற்ற விதத்தில் தேர்தல் நடவடிக்கைக்கு பயன்படுத்தியமை குறித்து 155 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகத்தின் முறைப்பாட்டு பணியகம் குறிப்பிட்டுள்ளது.

அதிகபடியாக 254 முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிககப்பட்டுள்ளது. (எ-12)

# புலிகளுக்கு பணம் மகிந்த வழங்கினார்

## சம்பிக்க விவாதத்துக்கு அழைப்பு

(கொழும்பு)


விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ராடா நிறுவனத்தின் ஊடாக பணம் கொடுக்கப்பட்டதா? இல்லையா? என்பது சம்பந்தமாக தன்னுடன் பகிரங்க விவாதத்துகத வருமாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சவால் விடுத்துள்ளார்.

கொழும்பு கில்பர்ட் டெரஸில்







23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கம்பன் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது. காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெற்ற இவ் விழாவில் மாலை அமர்வில் பட்டிமண்டபம் இடம்பெற்றது. இதன் போது எடுக்கப்பட்ட படங்களைக் காணலாம். (படங்கள் :- உ.சாளின்)

# உங்களுக்கு நேரடி பங்கு வர்த்தகம் சரிப்பட்டு வருமா?

பங்குச்சந்தையில் முதலீடு செய்யும் பலரை நாம் பார்த்திருக்கிறோம். பல கதைகளைக் கேட்டிருக்கிறோம்.

பலர் அடிப்படையில் 2 விடயங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். முதலாவது, நேரடி பங்குச் சந்தை முதலீடு என்பது எப்படிப்பட்ட ஒரு நடவடிக்கை என்பதையும் அது தமக்கு கைகூடக் கூடியதா என்பதையும் சரி வர ஆராய்ந்து புரிந்து கொள்ளாமலிருப்பது. இரண்டாவது, நேரடியாக பங்குகளை வாங்கி விற்பதே பங்குச் சந்தையில் முதலீடு செய்ய ஒரே வழி என்று நினைத்துக் கொண்டிருப்பது.

**சுலபம் அல்ல**

இதில் முதலாவதைப் பார்ப்போம். நேரடி பங்குச் சந்தை முதலீடு என்பது சாதாரண முதலீட்டாளர்களுக்கும் சாத்தியம்தான் ஆனால் சுலபமானது அல்ல. பங்குச் சந்தை இன்றைய நாட்களைப் போன்ற ஒரு ஏறுமுகத்தில் இருக்கும்போது, நமது நண்பர்கள் அல்லது உறவினர்கள் பலரும் தாம் இந்த கம்பனியில் பணம் போட்டு, இத்தனை லாபம் பார்த்தாகப் பிரஸ்தாபிப்பதை பலவாறு கேட்கலாம்.

இதுபோன்ற செவிவழிச் செய்திகளை நம்பியே பலரும் 'நாமும் இதை முயன்று பார்க்கலாமே' என்று துணிகிறார்கள். ஆனால், நம்மிடம் தமது வெற்றிகளைச் சொன்னவர்கள் அதன் கூடவே பெற்ற தோல்விகளை இழப்புகளை சொல்ல மாட்டார்கள். அதில் என்ன சுவாரசியம் இருக்கிறது?

பங்குகளை நேரடியாக வாங்க, விற்க நமக்கு ஓரளவுக்கு நிறுவனங்களையும் அதன் பொருளாதார ஆரோக்கியத்தையும் ஆராயத் தெரிந்திருக்க வேண்டும். ஒரு நிறுவனத்திற்கு ஆதார வருவாய் மூலமென்ன, அதன் ஸ்திரத்தன்மை என்ன, வியாபார ஒழுங்கு முறைகள் என்ன போன்ற கேள்விகளுக்கு பதில் காணத் தெரிய வேண்டும். ஒரு நிறுவனம் அடிப்படையில் 'நல்ல' நிறுவனமா இல்லையா என்று கணிக்கத் தெரிய வேண்டும்.

**கணிப்பில் தெளிவு**

இதைக் கணிக்கத் தெரிந்தாலும், அந்த நிறுவனத்தின் பங்கு விலை தற்போது ஒரு நல்ல, வாங்கக் கூடிய விலையில் இருக்கிறதா என்று கண்டு பிடிக்கத் தெரிய வேண்டும். ஒரு நல்ல நிறுவனத்தின் பங்குகளை வாங்கினாலும், அதை ஓரளவுக்குக் குறைந்த விலையில் வாங்கினால்தான் நமக்கு லாபம் கிடைக்கும், இல்லையா?

இப்படி வாங்கப்பட்ட பங்குகளை எப்போது விற்க வேண்டும் என்பது பற்றி ஒரு தேர்ந்த உள்ளுணர்வோ அல்லது முன்னதாக தீர்மானித்த ஒழுங்கு முறையோ தேவை.

**உணர்ச்சிகளுக்கு இடமில்லை**

முடிந்தவரை உணர்ச்சிகளை ஒதுக்கி வைக்க வேண்டும். செய்தித்தாள்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், இணையம், சமூக ஊடகங்கள் எனப் பல திசைகளிலிருந்தும் வரும் உள்ளீடுகளை பகுத்தாராய்ந்து ஏற்றுக் கொள்ளவோ நிராகரிக்கவோ வேண்டும். இவற்றிற்கு அப்பால் கொஞ்சம் அதிர்ஷ்டமும் வேண்டும்.

இவையெல்லாம் உங்களுக்குச் சாத்தியமென்றால், ஒரு சிடிஎஸ் கணக்கு தொடங்கி கலக்குங்கள். சிரமமென்றால் மாற்று வழி பரஸ்பர நிதிகளின் மூலம் முதலீடு செய்யும் போது, மேற்கூறிய அத்தனைத் தலைவலிகளையும் நாம் ஒரு நிதி முகாமையாளரிடம் ஒப்படைத்து விடுகிறோம்.


## British College of Higher Studies

வழங்கும் மிகக்குறைந்த கட்டணங்களில்
மாணவர்களுக்கான விடுமுறை காலப் பயிற்சி நெறிகள்

அன்பார்ந்த மாணவர்களே,
உங்கள் ஒரு மாத பாடசாலை விடுமுறையினை மிகவும் பயனுள்ளதாக்க விரும்புகிறீர்களா? நீங்களும் ஆங்கிலத்தில் சரளமாக ஒரு மாதத்தில் பேச விரும்புகின்றீர்களா? நவீன தொழில் நுட்ப போதனாமுறையின் கீழ் உங்களை மெருகேற்ற முனைகிறீர்களா? சரளமாக ஆங்கிலத்தில் கதைக்க முடியவில்லையென்று ஏக்கத்துடன் இருக்கின்றீர்களா? கவலையை விடுங்கள் இப்பொன்னான விடுமுறை காலத்தில் உங்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட கற்கை நெறியை நாம் வழங்கக் காத்திருக்கின்றோம். உங்களின் நேரத்திற்கேற்ப அனைத்து வகுப்புகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.

**Spoken English with Grammar**
Duration : 80 Hrs

வகுப்புகள் யாவும் நவீனமயப்படுத்தலின் கீழ் Speaking, Reading, Writing & Listening என வகைப்படுத்தி ஒவ்வொரு பிரிவும் பிரத்தியேக விரிவுரையாளர்களினால் நடாத்தப்படும்.
(Tutes, CD Lessons, Dictionaries, etc என்பன இலவசமாக வழங்கப்படும்)

Batches Start on
Batch I : 10/08/2015 — 09.00am to 12.00pm — Batch III : 14/08/2015
Batch II : 12/08/2015 — 02.00pm to 05.00pm — Batch IV : 15/08/2015

Students from Grade 9 can Join

BCHS
No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913, 0777222422, 0714299935


## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE — COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,332.05 | 7,370.60 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 4,107.97 | 4,097.22 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் — புரள்வு (ரூபா.மில்.) 8,480,366

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** பிமுத் பினான்ஸ்(82.40), லங்கீம் சிலோன்(123.10), லங்கீம் டெவலப்மன்ட்(7.10), ஈகுவிட்டி ரூ(70.00), சிற்றி ஹவுஸிங்(18.70).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** சிஜஎப்எல்(1.00), ஜே.கே.எச்(30.10), மடுல்சிமா(9.70), குட் ஹோப் (1,601.00), களனி வேலி(60.80).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 132.11 | 135.31 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 204.10 | 210.52 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 143.95 | 149.16 |
| சுவிஸ் பிராங் | 135.32 | 140.47 |
| கனேடிய டொலர் | 101.24 | 105.09 |
| அவுஸ்திரேலிய டொலர் | 95.66 | 99.78 |
| சிங்கப்பூர் டொலர் | 95.94 | 99.32 |
| ஜப்பான் யென் | 1.05 | 1.09 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.09 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.37 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Valampuri 004.pdf 1 8/10/2015 12:08:30 AM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் ஊடாக யாழில் 23.35 மில்.ரூபா நிதியொதுக்கீடு

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கென வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தினூடாக 23.35 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பகுதிகளிலும் ஆயிரத்து 32 வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன.

அந்தவகையில் விவசாயம், மீன்பிடி, கால்நடை, சந்தைப்படுத்தல் மற்றும் கைத்தொழில் ஆகிய பிரிவுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 75 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய உப கரணங்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் ஒவ்வொரு பிர தேச செயலரூடாகவும் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு இச்செயற்றிட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# கோஷ்டி மோதலில் அறுவர் படுகாயம்

வடமராட்சி துன்னாலை தெற்கு கரவெட்டிப் பகுதியிலுள்ள இரு குழுக்களுக்கிடையிலான கோஷ்டி மோதலில் 6 பேர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இக்கோஷ்டி மோதல் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெற்றுள்ளது. இரண்டு கோஷ்டிகளும் தனிப்பட்ட பகையின் காரணமாகவே மோதிக் கொண்டுள்ளனர். வாய்த்தர்க் கத்தில் ஆரம்பித்த மோதலானது இறுதியில் தடிகள், பொல்லுகள் கொண்டு கைகலப்பில் முடிந்துள்ளது.

மேற்படி கோஷ்டி மோதலில் 6 பேர் மாத்திரம் மோதியுள்ளனர் எனவும் மோதிக் கொண்ட 6 பேரும் காயமுற்றுள்ளனர் எனவும் தெரிய வருகிறது. (இ-5,60)


3 பட்டம் : நேர்மை, தகமை, சேவை

இது வேறு பாதை...

தமிழ்த் தேசியம், சுயநிர்ணய உரிமை ஓயாது!
தேசியக் கட்சிகள் எம் உரிமைக்கு துணைபோகா!
தனிக்கட்சி ஆதிக்கம் இங்கு விடையல்ல!
ஏழு 'நேர்மைகள்' தான் இங்கு விடையாக முடியும்!
மாற்றத்திற்கான நேரம் இது...

நேர்மை, உரிமை அரசியலை முன் நிறுத்துவேன்!
போதைவஸ்து ஒழிப்பு என் கடமைகளில் ஒன்று!

(093)

சுயேட்சைக் குழு - 5

X 3

வீ. ஆ. ஜெயசங்கரி B.A.
(Public Administration & Governance /அரச நிர்வாகமும் ஆட்சியும்)







பாராளுமன்றத் தேர்தல் - 2015
[யாழ்ப்பாண மாவட்டம்]

சி. கோகிலவாணி (சுகன்யா)

அறிக்கை அரசியல் உரிமைகள் தராது.
சுயநல அரசியல் சுதந்திரத்தை விலைபேசும்.
காலத் தேவையை உணர்ந்து சிந்தித்து வாக்களிப்பீர்.

X 9

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்
(தமிழ் தேசிய மக்கள் முன்னணி)

(C-424)















இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
Illankai Tamil Arasu Kachchi

X

5

மக்களுடைய...
மக்களால்...
மக்களுக்காக...

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் மக்களுடைய சொத்து. அவர் மக்களால் நாடாளுமன்றம் அனுப்பப் பட்டவர். மக்களுக்காகவே தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்.

ஈஸ்வரபாதம் சரவணபவன்
நாடாளுமன்றத் தேர்தல் 2015

(C-425)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் நியமனத்தில் 90 விழுக்காடு சிங்களவர்கள்

## வடக்கு விவசாய அமைச்சர் அதிருப்தி

மத்திய அரசாங்கத்தால் விரைவில் வழங்கப்படவிருக்கும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் நியமனங்களில் வடக்கில் 90 வீதம் சிங்களவர்களே இடம் பெற்றிருப்பதாகவும், இதன்மூலம் தமிழ் மக்களுக்குப் பெரும் அநீதி இழைக் கப்பட்டிருப்பதாகவும் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஊடகங்களு க்கு அனுப்பி வைத்திருக்கும் அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளார். இந்நியமனங்கள் தொடர்பாக அவர் விடுத்திருக்கும் அறிக்கையில்,

வடக்கின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயம் மூன்று தசா ப்தகாலப் போர் காரணமாக வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதிப்பில் இருந்து எமது விவசாயிகள் மீண்டெழ முடியாதவாறு இப்போதும் தவித்துக் கொண் டிருக்கின்றனர்.

இந்தச் சூழ்நிலையில், பாதிப்புகளை மேலும் அதிகரிக்கும் விதமாக, மத்திய அரசாங்கத்தால் தற்போது வழங்கப்படவுள்ள விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் நியமனத்தில் வடக்கில் 90 வீதம் சிங்கள மக்களே இடம்பெற்றிருப்பது தெரியவந்துள்ளது.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் ஆவணி 13ஆம் திகதி வழங்கப்படவிருக்கும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் நியமனங்களில் வடக்குக்கான 361 பேரில் 332 பேர் சிங்களவர்கள் ஆவர். இவர்களில், மாவட்ட ரீதியாக யாழ்ப்பாணத்தில் 164 பேரும், கிளிநொச்சியில் 41 பேரும், முல்லைத்தீவில் 53 பேரும், வவுனியாவில் 40 பேரும், மன்னாரில் 34 பேரும் நியமிக்கப்படவுள்ளனர். தெரிவு செய்யப்பட்ட 29 தமிழர்களில் யாழ்ப்பாணத்தில் 23 பேரும், கிளிநொச்சியில் 04 பேரும், வவுனியாவில் 02 பேரும் நியமிக்கப்படவுள்ளனர். முல்லைத்தீவிலும் மன்னாரிலும் ஒரு தமிழரேனும் தெரிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் எனப்படுவோர் நேரடியாக விவசாயிகளுடன் கலந்துரையாடி, அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதன் மூலம் விவசாய அபிவிருத்தியில் பெரும் பங்களிப்பு நல்க வேண்டியவர்கள். விவசாயிகளுடனான தொடர்பாடலுக்கு மொழி ஒரு தடையாக அமைந்துவிடக் கூடாது.

விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களுக்கான தேர்வுப் பரீட்சைக்கு வடக்கில் இருந்து 5 ஆயிரம் பேர் வரையில் தோற்றியிருந்தபோதும் 29 பேர் மட்டுமே தெரிவாகியுள்ளனர். மிகுதி வெற்றிடங்களை தென் இலங்கை வாசிகளைக் கொண்டு நிரப்புவதன் மூலம் மத்திய அரசு எமது விவசாயத்துக்குப் பாதகம் செய்திருப்பதோடு மாத்திரம் அல்லாது, எமது இளைஞர்களின் வேலை வாய்ப்புகளையும் தட்டிப்பறித்திருக்கிறது.

தென் இலங்கை மக்களுக்குரிய தேர்தல் சலுகையாக வழங்கப்பட்டுள்ள நியாயமற்ற இந்நியமனங்கள் மூலம் தமிழ்மக்களுக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் இந்நியமனங்களை உடனடியாக நிறுத்தி, மீளாய்வு செய்து, மாவட்ட ரீதியான தெரிவுமுறைமையை நடமுறைக்குக் கொண்டுவரவேண்டும். அதுவரை, இதற்கு ஏதுவாக அனைவரும் குரல் கொடுக்க வேண்டும் என்று குறிப்படப்பட்டுள்ளது.(இ)

# மரண அறிவித்தல்

## திரு.கதிர்காமத்தம்பி பாலச்சந்திரன்



(மாருதி பேக்கரி முன்னாள் முகாமையாளர்)

புலோலியைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான திரு. கதிர்காமத்தம்பி பாலச்சந்திரன் கடந்த 07.08.2015 அன்று இரவு 11.30 மணிக்கு காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.கதிர்காமத்தம்பி-பூலஷ்மி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும், தர்மினி, ரோகினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி. இ.கமலாசினி குமாரசாமி, அமரர் சிவநாதன், செல்வி நாகபூஷணி (வீணை ஆசிரியை), திருமதி தையல்நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினகோபால் மற்றும் மனோன்மணிதேவி, நாகேஸ்வரி, திரு.சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், சேயோன், மனோகரன், ஜனார்த்தனன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கீதாஞ்சலி, சங்கர், சிவராம், ஜெயராஜ், பிரசாத் ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று 09.08.2015 முற்பகல் 10 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

தும்பளை
பருத்தித்துறை

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## நடேசப்பிள்ளை ஜெயக்குமார் (பாலன்)

(பிரதான சந்தை முல்லைத்தீவு பிரபல வர்த்தகர்)

அன்னார் நுணாவில் மேற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், பிரதான வீதி முல்லைத்தீவு (சந்தையடியை) வதிவிடமாகவும் கொண்டவருமாவார்.

இவர், அமரர் திரு. பொ. நடேசப்பிள்ளை மற்றும் திருமதி. செல்வரத்தினத்தின் பாசமிகு மகனும், திரு. துரைராஜா, அமரர் திருமதி. விஜயலட்சுமியின் பாசமிகு மருமகனும், துஸ்யந்தினியின் அன்புக்கணவரும், சஜேந்தினி (சுவிஸ்), சர்மிளா (அவுஸ்திரேலியா), சுலக்சனின் பாசமிகு தந்தையும், ஹரிஷ்ணாவின் (அவுஸ்திரேலியா) செல்லப் பேரனும், பார்த்தீபன் (சுவிஸ்) புருசோத் ஆகியோரின் அன்பு மாமனாரும்.இந்திராணி, விஜயகுமார் (மலேசியா), சாரதா, சகுந்தலா(கொழும்பு), அமரர் நந்தகுமார் மற்றும் சந்திரகுமார்(முத்தையன்கட்டு), நந்தினி (வவுனியா), சாந்தினி (கொழும்பு), ஜெயந்தினி (கனடா) ஆகியோரின் அன்பும், பாசமும், நேசமும் மிகு சகோதரனும், பத்மாவதி (சுவிஸ்), சீதா (அச்சுவேலி), ரவீந்திரன்(கனடா) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், ராஜினி, ரஜனி, அமரர்.ராஜகோபால் மற்றும் சஜீந்தன், கேதுஜன், அபிலாஷ், அபிஷனா, துலக்சிகன், அபிசியன், அபிநயா, கம்சிகா ஆகியோரின் செல்ல மாமனாரும், தேனுஷா, நிதர்ஷனா, தேனுஷன், ஆனந்தராஜா, மேனகன், திஷாந்தன், துவாரகா, பிரியங்கன், டினோஷன், தேனுகா ஆகியோரின் பெரியப்பாவும்,


நர்மதா(கனடா), ஜெயநாயகி(கொழும்பு), சுபாஜினி(முத்தையன்கட்டு), அமரர் இராசதுரை மற்றும் உதயகுமார்(கொழும்பு), மதனதாஜ்(வவுனியா இ.மி.ச.), முகுந்தன்(கனடா), அமரர் துஷ்யந்தன் மற்றும் விஜயந்தன்(வினிசன் -சுவிஸ்), இராஜேந்திரன் (இராசன்-அச்சுவேலி) ஆகியோரின் மைத்துனரும் ,தீபன்ராஜ், திவ்யாவின் அப்பப்பாவும் ஆவார், அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் ஈமக்கிரி யைகளுக்காக வைக்கப்பட்டு 11.08.2015 நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 1.40 மணியளவில் முல்லைத்தீவு இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (சி-1779)

பிரதான வீதி, சந்தையடி, முல்லைத்தீவு.
தொ.பே.இல. 077 202 1001

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பக்த நந்தனார் இசைநாடகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் விசேட ஏற்பாட்டில் இணுவில் கந்தசுவாமி கோவில் இளந் தொண்டர் சபையினரின் பக்த நந்தனார் இசை நாடகம் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

மறுமலர்ச்சி மன்றத்தின் உள்ளக அரங்கில் நடைபெறவுள்ள இந் நிகழ்விற்கு மன்றத் தலைவர் எஸ். சுந்தரசிவம் தலைமை தாங்கவுள்ளார்.

முற்றிலும் இலவச அனுமதியுடன் நடைபெறவுள்ள இவ் ஆற்றுகைக்கு ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்ள முடியும் என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-5)










## தேர்தல் கருத்துக் கணிப்பு

### மாபெரும் போட்டி

- யாழ்ப்பாணம்-கிளிநொச்சி
- வன்னி

**தேர்தல் மாவட்டங்களில் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள்**

1. பெற்றுக் கொள்ளும் ஆசன எண்ணிக்கை?
2. பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படுபவர்களின் பெயர்கள்?

### போட்டி நிபந்தனை

- ஒருவர் ஒரு கருத்துக்கணிப்பை மட்டுமே அனுப்பி வைக்க முடியும்
- போட்டியாளர் தாம் சார்ந்த தேர்தல் மாவட்டத்தின் முடிவை மட்டும் அனுப்பி வைத்தல் வேண்டும்.
- வலம்புரியில் வெளிவரும் விண்ணப்பப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு போட்டி முடிவுடன் இணைக்கப்பட வேண்டும்.
- முடிபுகள் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் தேர்தல் கருத்துக் கணிப்பு - 2015 என தவறாது குறிப்பிடவும்.
- உங்கள் கருத்துக்கணிப்பை 06.08.2015 தொடக்கம் 14.08.2015 வரை அனுப்ப முடியும் அனுப்பவேண்டிய முகவரி பிரதம ஆசிரியர், வலம்புரி, இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

### போட்டிக்கான விண்ணப்பப்படிவம்

போட்டியாளரின் முழுப் பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................


தொலைபேசி இல. : ..............................

தேசிய அடையாள அ.இல. : ..............................

..............................

போட்டியாளரின் கையொப்பம்

குறிப்பு:- தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னரே போட்டி முடிபுகள், வெற்றியீட்டியவர்களின் விபரம் வெளிவரும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வடக்கு இராஜ கோபுரத்திற்கான கலசம் வைக்கும் வைபவம் நேற்று இடம்பெற்றது. நல்லூர் கந்தனின் தெற்கு கோபுரத்திற்கு நேர் எதிராக வடக்காக அமைக்கப்பட்டுக்கொண்டிருந்த கோபுர கட்டுமான பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் நல்லூர்க் கந்தனின் பெருந்திருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையிலும் நேற்றைய தினம் விசேட பூசை வழிபாடுகளுடன் புதிதாக அமைக்கப்பட்ட கோபுரத்திற்கான ஒன்பது கலசங்களும் பூசை வழிபாடுகளுடன் வைக்கப்பட்டன. இதன்போது ஏராளமான பக்தர்கள் திரண்டு நல்லூர்க் கந்தனின் தரிசனத்தில் ஈடுபட்டிருந்தனர். (படங்கள் :- உ.சாளின்)

## தேர்தல் வன்முறையில் ஈடுபடக்கூடும்

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர்களை உடன் கைது செய்ய நீதிமன்று உத்தரவு

## நீதிபதி இளஞ்செழியன் விடுத்தார்

(யாழ்ப்பாணம்)

**குற்றச் செயல்களுக்காக நீதிமன்றத்தினால் தேடப்படும் நபர்கள், நீதித்துறை நீதிமன்ற பிடியாணையில் தேடப்படும் நபர்கள் தேர்தல் வன்முறையில் ஈடுபடக்கூடும். அதனை அனுமதிக்க முடியாது. அத்தகைய நபர்களை உடன் கைது செய்ய வேண்டும் என உத்தரவிட்டுள்ள நீதிபதி இளஞ்செழியன், இவ்வாறு தேடப்படுபவர்கள் அண்மையில் உள்ள நீதிமன்றங்களில் உடனடியாக சரணடைய வேண்டும் என கஞ்சா தண்டனைக் குறைப்பு வழக்கொன்றில் அளித்துள்ள தீர்ப்பில் அறிவுறுத்தியுள்ளார்.**

தேர்தல் வன்முறைகளில் பாதாள உலகக் கோஷ்டியினர் ஈடுபடுவதைத் தடுப்பதற்காக நாடளாவிய ரீதியில் அவர்களைத் தேடிப் பிடித்து கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். இதற்கென சாதாரண பொலிஸாருக்கு மேலதிகமாக விசேட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டு, நாட்டின் பலபகுதிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையிலேயே யாழ்ப்பாணத்தில் நீதிமன்றத்தினால் தேடப்படுபவர்கள் மற்றும் பிடியாணையில் தேடப்படுபவர்களைக் கைது செய்யுமாறு நீதிபதி இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

தேர்தல் வன்முறைக்கு யாழ்ப்பாணத்தில் இடமில்லை. வன்முறையில் ஈடுபடும் நபர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள். பாரதூரமான குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளவர்களுக்கு தேர்தல் தினத்தன்று வாக்களிப்பதற்கான பிணை அனுமதியும் வழங்கப்படமாட்டாது என்றும் நீதிபதி இளஞ்செழியன் அந்தத் தீர்ப்பில் எச்சரிக்கை செய்துள்ளார்.

போதைப் பொருளாகிய கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தார், அத்துடன், அதனை விற்பனை செய்தார் என குற்றஞ்சாட்டி, பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 60 வயதுடைய வயோதிபர் ஒருவர் விளக்கமறியலில் இருந்து வருகின்றார்.

இந்தவயோதிபரைப்பிணையில் செல்ல அனுமதிக்கக் கோரி, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் பிணைமனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான நீதிமன்ற விசாரணையின் போது தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களுக்குத் தானே குற்றவாளி என அந்த வயோதிபர் ஒப்புக்கொண்டார். இதனையடுத்து, அவருக்காக நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி, அவர் முற்குற்றம் எதனையும் செய்யவில்லை. அவருக்கு அறுபது வயது. சந்தர்ப்பவசத்தினாலேயே அவர் நீதிமன்றத்தின் குற்றக் கூண்டில் நிற்கின்றார்.

எனவே, அவருடைய வயதையும், முற்குற்றம் செய்யவில்லை என்பதையும் கவனத்திற் கொண்டு, அவருக்கு கட்டாய சிறைத் தண்டனைத் தீர்ப்பினை அளிக்காமல், தண்டப்பணம் விதித்து தீர்ப்பளிக்குமாறு நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்தார்.

வழக்கு விசாரணையையும், எதிரி தரப்பு சட்டத்தரணியின் விண்ணப்பத்தையும் ஆராய்ந்து தீர்ப்பளித்த நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்ததாவது,

தேர்தல் காலத்தில் வன்முறைகளைக் கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டும் என்பதற்காகவே, நீதிமன்றத் தாக்குதல்கைதிகள், போதைவஸ்து கைதிகள், வாள்வெட்டு மற்றும்கோஷ்டி சண்டித்தன கைதிகள் தெரு ரவுடித்தன கைதிகள் என பாரதூரமான குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ள கைதிகள், தேர்தல் முடிவடைந்து, புதிய பாராளுமன்றம் கூடும் வரையில், பிணையில் வெளியில் வர முடியாதவாறு, நீதிமன்ற கட்டளைக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். தேர்தல் தினத்தன்று வாக்களிப்பதற்கும் இவர்களுக்குப் பிணை அனுமதி வழங்கப்படமாட்டாது,

நீதிமன்றமானது, தேர்தல் காலப்பார்வையாளரோ அல்லது கண்காணிப்பாளரோ அல்ல. வன்முறை குற்றவாளிகளை கட்டுப்படுத்த சட்ட நடவடிக்கை எடுக்கும் பாதுகாவலன். நீதிமன்றமே, சட்டத்தின் மேலான பாதுகாவலன்.

தேர்தல் வன்முறையால் வாக்காளர்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்படக் கூடாது. அதே போன்று வேட்பாளர்களுக்கும் எவ்வித இடைஞ்சல்களும் ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் பாரிய குற்றச்சாட்டு கைதிகள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் வன்முறை இல்லாத இடமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தை வைத்திருக்க வேண்டிய கடமைப்பாடும் பொறுப்பும் நீதிமன்றங்களுக்கு உண்டு.

ஆகவே, சட்டத்தை எவரும் கையில் எடுப்பதற்கு அனுமதிக்க முடியாது. நீதிமன்றப் பிடியாணையில் தேடப் படும் அனைத்து நபர்களும் தேர்தல் வன்முறையில் ஈடுபட முடியாதவாறு, கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, தேடப்படுபவர்கள் அண்மையில் உள்ள நீதிமன்றங்களில் உடனடியாக சரணடைய வேண்டும்.

இந்த வழக்கின் எதிரி கஞ்சா விற்பனை செய்தமை உடைமையில் வைத்திருந்தமை என்பன அவர் செய்த குற்றங்களாகும்.

இந்தக் குற்றங்களைப் புரிந்த ஒருவருக்கு அதிக பட்சமாக ஓராண்டு கடூழியச் சிறைத் தண்டனை விதிப்பதற்கு போதைவஸ்து கட்டளைச் சட்டம் பரிந்துரை செய்கின்றது. இருப்பினும் எதிரியின் சார்பில் செய்யப்பட்டுள்ள சட்டத்தரணியின் கருணை விண்ணப்பம் மன்றினால் பரிசீலிக்கப்படுகின்றது. அறுபது வயது வயோதிபர் தேர்தல் வன்முறைகளில் ஈடுபடக் கூடிய நபரல்ல.

இவர், எதுவித முற் குற்றமும் செய்யவில்லை என்பதன் அடிப்படையில் மன்று அவருடைய வயதுக்கு மதிப்பளித்து, கட்டாய சிறைத் தண்டனையைத் தவிர்த்து, 40 ஆயிரம் தண்டம் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகின்றது.

தண்டத்தைச் செலுத்தத் தவறினால், ஓராண்டு சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும். இவ்வாறு நீதிபதி இளஞ் செழியன் தமது தீர்ப்பில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Valampuri 001.pdf 8/9/2015 7:36:58 PM

# மணிவிழா



## இளையதம்பி தேவராஜா
## திரு.இ.தேவராசா அதிபர்

யா/பொன்பரமானந்தர் மகா வித்தியாலயம்
குரும்பசிட்டி

**சேவை விபரம்**

| பாடசாலையின் பெயர் | வகிக்கும் பதவி | இருந்து | வரை | வருடம் |
|---|---|---|---|---|
| நு/கெலிவத்தை த.வி.பத்தனை | ஆசிரியர் | 81.11.02 | 84.02.16 | 02.03.14 |
| யா/ஆசிரியர் கலாசாலை கோப்பாய் | ஆசிரியர் | 84.02.17 | 85.12.31 | 01.10.14 |
| நு/உடரதல்ல த.வி.நானுஓயா | அதிபர் | 86.01.01 | 03.06.08 | 17.05.07 |
| க/பன்முர் த.வி.ஹற்றன் | பி.அதிபர் | 03.06.09 | 03.08.24 | 00.02.15 |
| யா/சிறுப்பிட்டி இ.த.க.பாடசாலை நீர்வேலி | அதிபர் | 03.08.25 | 11.01.12 | 08.04.16 |
| யா/பொன்பரமானந்தர் ம.வி.குரும்பசிட்டி | அதிபர் | 12.01.12 | 05.08.10 | 03.06.28 |
| | மொத்தம் | | | 33.08.04 |

இன்று மணிவிழாக் காணும் இளையதம்பி தேவராஜா அவர்கள் இன்றுபோல் என்றும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஞான திருக்கேதீஸ்வரன் (ஆசிரியர்)குடும்பத்தினர் (K.T.C. கோண்டாவில்)
இ.செந்தில் குமரன் (ஓய்வு நிலை அதிபர் றோ.ம.க.வித்தி.கோண்டாவில்)குடும்பத்தினர் இணுவில்



## பாராளுமன்ற தேர்தல்- 2015
### யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்
### அகில இலங்கை தமிழர் மகாசபை





X



3 9

நயினை கலாநிதி எந்திரியர் காசிலிங்கம் விக்னேஸ்வரன்

சி.சதீஸ்வரராசா (அன்றா)



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 45 செவ் 7 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: A/L/ கட்டார்
தொ.இ: B/4839

பிறப்பு: 1955 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 51 சூரிசெவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில் A/L/ அரச தொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/4841

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 35 உயரம்: 5'10"
தகைமை/தொழில்: A/L/ கனடா PR
தொ.இ: B/4842

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 42 செவ் 4 இல்
உயரம்: 177cm
தகைமை/தொழில்: BA/ டென்மார்க்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/4845

**மணமகன் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 38 செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர் இந்தியா
தொ.இ: G/4873

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 28
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/4875

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 16 செவ் 12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Q/S/ தனியார் தொழில்
தொ.இ: G/4876

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 45 உயரம்: 5'
தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்
தொ.இ: G/4877

## கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



## பாராளுமன்றத் தேர்தல் 2015
வன்னி தேர்தல் தொகுதி



ஈழமக்களின்
இயல்பான
வாழ்விற்காய்...

(சி-393)



X 3

## திரு. இ.சாள்ஸ் நிர்மலநாதன்
தொழிலதிபர் , பிரஜைகள் குழு உபதலைவர்

## இலங்கை தமிழரசுக் கட்சி
(தமிழ் தேசிய கூட்டமைப்பு)

வன்னி தேர்தல் தொகுதி மக்கள்


**மீனம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், உடல்நலன் சீராகும், தொலைதூரச் செய்திகள் தொழில் வளர்ச்சிக்கு துணை புரியும்.

**மேடம்** வெற்றிகரமான செய்திகள் வீடு வந்து சேரலாம், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு.

**இடபம்** அலங்காரப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், உறவினர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், மகிழ்ச்சிகரமான செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று அமையலாம்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

| கேது | | | சந் |
|---|---|---|---|
| | | | சூரி செவ் |
| | கிரக நிலை | | குரு சுக் புதன் |
| | | சனி | ராகு |

## ராசி பலன்
10.08.2015
(ஆடி 25, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
ஏகாதசி முன்னிரவு 7.33 மணிவரை
மிருகசீரிடம் முன்னிரவு 10.17மணிவரை
இராகுகாலம் 7.34-9.04 மணிவரை
சுபநேரம் 12.04-1.34 மணிவரை
ஏகாதசி விரதம், அமிர்தசித்தம்
**வளவன்**

**கடகம்** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**மகரம்** மறைமுக எதிர்ப்புகள் மாறும், உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், கைமாற்றாக கொடுத்த பணம் கைக்கு வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், பயணங்கள் கைகூடும்.

**தனுசு** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**விருச்சிகம்** சிந்தித்து செயற்படுவதன் மூலம் சிறப்புக்களைப்பெற வேண்டிய நாள், வரவைக் காட்டிலும் செலவுகள் கூடலாம், பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம்.

**துலாம்** பொருளாதார நிலை உயர என்ன வழியென்று யோசிப்பீர்கள், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**கன்னி** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு, உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1210

## கழுகு, பருந்து, குயில்

...**து**ணிச்சலாக சில காரியம் செய்து தனக்கென்று ஒரு பெயரை ஏற்படுத்திக் கொள்வார். இறுதியில் தங்கள் நண்பர்களாலேயே வெறுக்கப்பட்டு அவர்களாலேயே பழிவாங்கப்படுவார். அவர் தனது கடைசி நாட்களை சிறையில் அனுபவிக்க வேண்டி வரலாம்!"

"உங்கள் இரண்டாவது மகன மிகவும் சாமர்த்தியசாலி. குடும்பப் பெருமையை, பாரம்பரிய நற்பெயரைக் காப்பாற்றுவதில் ஆர்வம் உள்ளவர். இருப்பினும், அவரது ராஜதந்திரமான செயல்களால் இறுதியில் அவர் பல விரோதிகளைச் சம்பாதித்துக் கொள்வார். நேர்மைக்கு அவரிடம் பஞ்சம் இருக்கும். அவர் செய்யும் மறைமுகமான செயலகளே அவர்களுக்கு விரோதிகளைத் தேடித் தந்துவிடும். அவரது இறுதி நாட்களும் கூடப் பரிதாபத்துக்கு உரிய நாட்களாகவே இருக்கும்!"

"உங்கள் மூன்றாவது மகன் தன்னலம் கருதாது எல்லாரையும் நேசிப்பவர். அவர் எல்லாராலும் நேசிக்கப்படுவார். அவர் யாரிடமும் சண்டைக்குப் போக மாட்டார். அவரை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அனைவரும் நேசிப்பர். ஒரு காலத்தில் தங்களைக் காட்டிலும் அவர் அதிக நாடுகளுக்கு அதிபதியாக இருப்பார். அவர் மறைவு மிக அமைதியாகவும், எல்லாராலும் துக்கப்படக்கூடியதாகவும் இருக்கும்," என்றார்.

அந்த விஷயம் அன்று அத்தோடு முடிந்து போனது.

மூன்று இளவரசர்களும் வாலிபர்களாக வளர்ந்து யாராலும் ஜெயிக்க முடியாத பராக்கிரமசாலிகளாக மாறினர்.

நாட்கள் உருண்டோடி மாதங்களாகி, அவையும் வருடங்களாக ஓடி மறைந்தன. மன்னன் மகேந்திர வர்மன் இப்போது மிக வயோதிகனாகி விட்டான். அவரை வியாதிகள் மொய்த்துக் கொண்டன. கடைசியாக அவர் படுத்த படுக்கையானார். அவர் இறுதிகாலம் வந்த போது மீண்டும் தன் ராஜ்ஜியத்தை யாரிடம் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்ற குழப்பம் உண்டானது. உடனே தனது புத்திசாலி நண்பன் பல ஆண்டுகளுக்கு முன் தன் பிள்ளை களைப் பற்றி அறிந்து சொன்னது நினைவுக்கு வந்தது.

தன் மூன்று பிள்ளைகளையும அழைத்து அவர்களிடம் தனது கருத்தைச் சொன்னார். மூத்த புதல்வனை அருகில் அழைத்து, "அப்பா, உனக்கு நம் நாட்டிலிருந்து மிக தூரத்தில் நான் வென்று இதுவரை என் ஆளுகையின் கீழ் வைத்திருக்கும் மிகப் பெரிய மாளவநாட்டை அளிக்கிறேன். அந்த நாட்டை ஆட்சி செய்து, நீ மேலும், மேலும் பேரும் புகழும் பெற வேண்டும்," என்றார்.



இரண்டாவது மைந் தனை அழைத்து, "அப்பா, உனக்கு இப்போது நாம் ஆட்சி செய்து வரும் இந்த கூர்ஜர நாட்டை அளிக்கிறேன். நீ மன்னனாக முடி சூட்டிக் கொண்டு, மக்களை நல்ல முறையில் ஆட்சி செய்து நல்ல பெயர் எடுக்க வேண்டும்," என்று வாழ்த்தினார்.

மூன்றாம் மகனும், கடைசிப் பிள்ளையுமான ஜனார்தனை இறுதியாக அழைத் தார்.

"அப்பனே, உனக்குக் கொடுக்க என்னிடம் நாடு எதுவும் இல்லை. ஆனால், என்னிடம் இருக்கும் சேமிப்பிலிருந்து ஒரு பெரிய பெட்டி நிறைய தங்கத்தைக் கொடுக்கிறேன். நீ அதை வைத்து சமர்த்தாகப் பிழைத்துக் கொள்!" என்றார்.

ஜனார்தனும், "அப்படியே ஆகட்டும் தந்தையே," என்று அவரை புன்சிரிப் போடு வணங்கினான்.

சில நாட்களில் மகேந்திரவர்மன் இறந்தார்.

மகேந்திரவர்மனின் அறிவாளி நண்பர் சொன்னது போலவே, நடந்தது.

முதல் மகன் ஆரம்பத்தில் அவனது எல்லையற்ற பராக்கிரமத்தால் எல்லாரையும் கவர்ந்தான். நாளாக, நாளாக அவன் பராக்கிரமத்தைக் கண்டு அஞ்சியவர்கள் சதி செய்து அவனைச் சிறையில் அடைத் தனர். அவன் அங்கேயே தன் இறுதி நாட்கள் வரை இருந்து ஒருவரும் அறியாமல் மாண்டு போனான்.

இரண்டாமவன் மிக சாமர்த்தியமாக நடந்து கொள்வதாக நினைத்து எல்லாரையும் ஏமாற்றிக்கொண்டு இருந்தான். தனது மந்திரிகளையும், தளபதிகளையும் சிறிதும் யோசனை இல்லாமல் ஒருவரிடம் ஒருவர் பகை கொள்ளும்படியாக ஏவி விட்டான். உண்மை வெளிவந்ததும் அவரகள் தாங்கள் ஏமாற்றப்பட்டதை உணர்த்து ஆத்திரமடைந்து அவனைச் சித்திரவதை செய்து நாட்டை விட்டே விரட்டி விட்டனர். அவன் தங்க நாடில்லாமல் நாடோடியாகத் திரிந்து ஏதோ ஒரு வெளிநாட்டில் இறந்து போனான்.

ஜனார்தன் தன் பொறுமையைக் கைவிடாமல் மெதுமெதுவாக தனது அண்ணனின் ஆதிகத்திலிருந்த கூர்ஜர நாட்டைப் பிடித்தான். அடுத்து சிறிது சிறிதாக மாளவ நாடும் அவன் கைக்கு வந்தது. மற்ற நாட்டு மக்களும் அவன் ஆளுகைக்குக் கீழ் இருப்பதைப் பெரிதும் விரும்பினர். நாளடைவில் அவன் பெருமை வெகுவாகப் பரவியது. சிறிது காலத்தில் பல நாடுகளையும் கைப்பற்றி, நல்ல முறையில் ஆட்சி செய்தான். **(முற்றும்)**

## 08.2015 10 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1519 - மகலனின் ஐந்து கப்பல்கள் உலகைச் சுற்றிவர செவில் நகரிலிருந்து புறப்பட்டன.
- 1675 - ரோயல் கிறீனிச் வானாய்வகத்துக்கான அடிக்கல் லண்டனில் நாட்டப்பட்டது.
- 1680 - நியூ மெக்சிகோவில் ஸ்பானிய குடியேறிகளுக்கெதிராக புவெப்லோக்களின் எழுச்சி ஆரம்பமானது.
- 1741 - குளச்சல் போர்: திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மர் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனியுடனான போரில் டச்சுத் தளபதி ஸ்ட்டாச்சியஸ் டி லனோய் என்பவனைச் சிறைப்பிடித்தார்.
- 1776 - அமெரிக்காவின் விடுதலைப் பிரகடன செய்தி லண்டனைப் போய்ச் சேர்ந்தது.
- 1792 - பிரெஞ்சுப் புரட்சி: பாரிசில் தீவிரவாதிகள் ரிலெரீஸ் அரண்மனையை முற்றுகையிட்டு பதினாறாம் லூயி மன்னனைக் கைது செய்தனர்.
- 1809 - குவிட்டோ (தற்போதய ஈக்குவாடோரின் தலைநகர்) பிரான்சிடமிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1821 - மிசூரி ஐக்கிய அமெரிக்காவின் 24 ஆவது மாநிலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படையினர் மிசூரியின் தென்மேற்குப் பகுதியில் கூட்டணிப் படைகளை வென்றனர்.
- 1904 - ரஷ்யப் படைகளுக்கும் ஜப்பானியர்களுக்கும் இடையில் மஞ்சள் கடலில் கடற்போர் இடம் பெற்றது.
- 1913 - பால்கான் போர்கள்: பல்கேரியா, ருமேனியா, செர்பியா, மொண்டெனேகுரோ, கிரேக்கம் ஆகிய நாடுகள் புக்கரெஸ்ட் நகரில் அமைதி உடன்பாட்டை எட்டின.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் குவாமில் நிலை கொண்டிருந்த கடைசி ஜப்பானியப் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1948 - ஜவஹர்லால் நேரு இந்திய அணுசக்திப் பேரவையைத் (Atomic Energy Commission) துவக்கி வைத்தார்.
- 1990 - மகெலன் விண்கலம் வெள்ளிக் கோளை அடைந்தது.
- 2000 - உலக மக்கள் தொகை 6 பில்லியனைத் தாண்டியது.
- 2003 - யூரி மலென்சென்கோ விண்வெளியில் திருமணம் புரிந்த முதலாவது மனிதர்.
- 2006 - திருகோணமலையில் சேருவிலப் பகுதியில் தொடர்ச்சியான குண்டுவீச்சினால் 50 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

**பிறப்புக்கள்**

- 1894 - வி. வி. கிரி, 4 ஆவது இந்தியக் குடியரசுத் தலைவர் (இ. 1980)

**இறப்புகள்**

- 1790 - பிலிப்பு தெ மெல்லோ, தமிழ் டச்சு அறிஞர் (பி. 1723)
- 1899 - சி. தியாகர், நல்லூரைச் சேர்ந்த தமிழறிஞர்
- 1980 - யாஹ்யா கான், பாகிஸ்தான் அதிபர் (பி. 1917)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 253**


## அஹங்காரத்தை விடுதல்

... நான் சொல்கிறேன்... நமது அஹங்காரத்தை விடும் இந்த முழுச் செயல்முறையுமே, நமக்குள்ளிருக்கும் குழந்தையை மீண்டும் கண்டு பிடிப்பதற்கான முயற்சிதான். நமது இளம்பிராயத்தில், கடவுளை உணர மிகவும் நெருக்கத்தில் இருந்தோம். நாம் வளர்ந்து பெயரளவிலான பக்குவத்தை அடைந்த பிறகு, நமது சமூக நெறிப்படுத்தல்கள், நமக்கு உள்ளிருந்த குழந்தையை அழித்து விட்டது.

பலர் என்னிடம் கேட்கிறார்கள். ஸ்வாமிஜி, எவ்வாறு உங்களால் மிகப்பெரிய உண்மையைப் பற்றி பேசினாலும் ஒரு குழந்தையைப் போல இருக்க முடிகிறது? இப்பொழுது சொல்லுங்கள். நான் வளர்ந்து பக்குவம் அடையாததால் ஒரு குழந்தையைப்போல இருக்கிறேனா! நீங்கள் வெறுமனே விடயங்களை உங்களுக்கு சௌகரியமான வழிகளில் உங்கள் சொந்த தத்துவ வழிகளில் அர்த்தம் கொண்டு விடுகிறீர்கள், அதுதான் பிரச்சினை.

சமூக நெறிப்படுத்தல்கள் இல்லாவிடில் பயிற்சியின்றியே நமக்கு நீந்தும் மற்றும் பறக்கும் திறமைகள் இருக்கின்றன. இது உங்களுக்கு அபத்தமாகத் தோன்றினாலும் உண்மை. நம்மிடம் இந்தத் திறமைகள் இருக்கின்றன. நம்மால் நீந்தவும் பறக்கவும் முடியாது என்று மக்கள் நம்மிடம் சொல்லத் தொடங்கும்வரை, நம்மால் நீந்தவும் பறக்கவும் முடியும். நீங்கள் ஒரு பிறந்த குழந்தையை நீச்சம் குளத்தில் விட்டால் அது மூழ்காமல் மிதந்து கொண்டிருக்கும்.

அஹங்காரம் தன்னை பல வழிகளிலும் வெளிப்படுத்திக்கொள்கிறது.



நாம் நமது வாழ்வின் ஒவ்வொரு நிமிடமும் அதற்கேற்றபடியே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் நமது தினசரி வாழ்வில் உண்மையில் முகமூடிகளை உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறோம். நமது அம்மாவிடம் ஒரு முகமூடியை உபயோகப்படுத்துகிறோம். அப்பாவிடம் இன்னொரு முகமூடியை உபயோகப்படுத்துகிறோம்; நமது மேலதிகாரிக்கு வேறு ஒன்று. என்று இவ்வாறு பல முகமூடிகளை உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறோம். நாம் ஒவ்வொருவருக்கும் அவரவர்க்கேற்ற சரியான முகமூடியை உபயோகப்படுத்திக்கொண்டிருக்கும் வரை சரிதான். யாராவது ஒருவரிடம் தவறான ஒரு முகமூடியை உபயோகப்படுத்திவிடும் கணத்தில் உங்கள் அஹங்காரம் உள்ளே நுழைந்துவிட்டது என்று பொருள். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் முகமூடியை திறமையாக மாற்றிக்கொண்டு காட்சியை ரசித்துக் கொண்டு இருக்க வேண்டியதுதான். அப்பொழுது நீங்கள் கவனிப்பவர் மட்டுமே; விளையாட்டில் ஒரு திடமான வஸ்துவாக ஈடுபடவில்லை.

நீங்கள் முகமூடிக்கும் அப்பால் ஏதோ ஒன்றாக இருக்கிறீர்கள் என்பது தெரிந்தால்தான் உங்களால் ரசிக்க முடியும். இல்லாவிடில் முகமூடியால் உணர்ச்சிகளில் அடித்துச் செல்லப்பட்டு வாழ்க்கையின் மொத்தக் கவர்ச்சியையும் இழந்து விடுவீர்கள். நீங்கள் முகமூடிகளைத்தான் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்பது தெரிந்தால் உங்கள் ஆசைகள் தானாகவே நழுவி விழுந்து விடும். *(தொடரும்)*

**பரமஹம்ஸ சுவாமி**

# ரணில் - மகிந்த போட்டியில் வெல்லப்போவது சந்திரிகாவா?



இலங்கை அரசியல் வரலாற்றில் உலக நாடுகள் அனைத்தினதும் கவனத்தை ஈர்த்த ஒரு தேர்தலாக 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை அடையாளம் செய்யலாம். காரணம், இலங்கை அரசியலின் போக்கினை முழுவதுமாக மாற்றி, சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவை பெற்றிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இத்தேர்தலில் தோற்றுப் போனமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய கடந்த ஜனாதிபதித் தேர்தலில், போட்டிக் களத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும், இந்நாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இருந்தார்கள். ஆனால சுதந்திர கட்சியின் முன்னாள் தலைவியும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா அம்மையாருக்கும், அதே சுதந்திர கட்சியின் தலைவராகவும், ஜனாதிபதியுமாக இருந்த மகிந்தவிற்கும் இடையில்தான் பலத்த போட்டி காணப்பட்டது.

அவ்வாறாக பார்க்கின்ற பொழுது, கடந்த பொதுத்தேர்தலில் சுதந்திரக் கட்சி தோற்க வில்லை, மகிந்ததான் தோற்றார்.

இப்பொழுத் தேர்தலில் சுதந்திரக் கட்சி தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே சந்திரிகா அம்மையார் மறுபடியும் களத்தில் புகுந்திருக்கின்றார்கள் என எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்தி வரும் இந்நிலையில், வெல்லப்போவது ஐக்கிய தேசிய கட்சியில்லை. ஐக்கிய தேசிய முன்னணி எனப்படுகின்ற சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள் என்பது வெட்டவெளிச்சமாக போகின்றது.

இலங்கை அரசியல் வரலாற்றில் 2005 ற்கு முன் 12 வருடங்கள் இலங்கையில் ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா அம்மையாரின் செல்வாக்கு இன்று வரை நீடிக்கின்றது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இங்கு எம்மத்தியில் எழும் சந்தேகம் என்னவென்றால் சந்திரிகா அம்மையாரின் மீள் வருகையானது, நல்லாட்சி மலர வேண்டும் என்பதற்காகவா? அல்லது மீண்டும் தீய ஆட்சி வந்துவிடகூடாது என்பதற்காகவா?

சுதந்திரக் கட்சியின் செல்லப்பிள்ளையாக இருந்த சந்திரிகா அம்மையாரின் அந்தஸ்து மகிந்தவின் வருகைக்குப் பின் முற்றிலும் இல்லாமல் போனமை குறிப்பிடத்தக்கது.

தன்னால் வளர்க்கப்பட்ட கட்சியில் தனக்கே இடம் இல்லாமல் செய்த மகிந்தவை பழிவாங்கும் நோக்கமா? என்பதும் நாம் யோசிக்க வேண்டியுள்ளது.

இருப்பினும் இலங்கை ஒட்டுமொத்த மக்களின் பெரும்பான்மை விருப்பத்தில் சந்திரிகா அம்மையார் இருப்பதனால் சில விடயங்கள் வெளிவருவதில்லை. வெளிவர வேண்டியதன் அவசியமும் இல்லை.

கடந்த தேர்தலைப் பொறுத்தவரை வேட்பாளர் மட்டும்தான் மைத்திரி. மற்றைய அனைத்து நடவடிக்கைகளையும் முன்னின்று நடத்தி, அதில் வெற்றியும் கண்டவர் சந்திரிகா அம்மையார்தான்.

ஒரு வகையில் பார்த்தால் மகிந்தவினால் கொண்டுவரப்பட்ட 18 ஆம் சீர்த்திருத்தத்தில் சொல்லப்படுகின்ற, ஒருவர் எத்தனை தடவையும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படலாம் என்பதனை மறைமுகமாக நிறைவேற்றிக் கொண்டவராகவே நாம் சந்திரிகா அம்மையாரை அடையாளம் செய்யலாம்.

தற்போது 2015 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலிலும் அதே நிலைதான் நீடித்து வருகின்றது. குறிப்பாக கடந்த ஓகஸ்ட் 5 ஆம் திகதி சந்திரிகா அம்மையார் வெளியிட்ட அறிக்கையில் ஜனவரி 8 ஆம் திகதி கிடைத்த வெற்றிக்கு அர்ப்பணிப்பு செய்த அனைவரும் எவ்வித வேறுபாடுகளும் இன்றி, ஒன்று சேர்ந்து நாட்டை பாதுகாப்பதற்காக ஒன்றுபடுமாறும், அனைத்து சுதந்திர கட்சி ஆதரவாளர்களிடமும் கோரிக்கை விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

அதிகார மோகத்தில் நாட்டின் ஜனநாயகத்திற்கு எதிராக செயற்படுகின்ற விசமிகளை தோற்கடித்தல் மிகவும் இன்றியமையாதது எனவும் இங்கு மேலும் சுட்டிக்காட்டியிருந்தார். அவர் வெளியிட்ட கருத்துக்கள் எல்லாமே மகிந்தவிற்கு எதிராகவே இருக்கின்றது.

இதற்கு கடந்த ஓகஸ்ட் 6 ஆம் திகதி பதிலடிக் கொடுத்த மகிந்த ராஜபக்ஷ, சந்திரிகா யார் என்பதனை நாம் அனைவரும் அறிவோம். சந்திரிக்கா ஓர் செல்லாக்காசு. அவரது அறிக்கைகள், கருத்துக்கள் மூலம் எனக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என தெரிவித்திருந்தார்.

இவ்வாறு பார்க்கின்ற பொழுது தற்போது போட்டியானது கடந்த ஜனாதிபதி தேர்தலை போலவே மீண்டும் மகிந்தவிற்கும், சந்திரிகா அம்மையாருக்கு இடையில் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது. ஆனால், இதனால் பலன் அடைந்தவர்கள் கடந்த தேர்தலில் மைத்திரியும், இப்பொது தேர்தலில் ரணிலாக இருப்பாரா? என பொருத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இருப்பினும் 12 வருடகாலம் இலங்கையினை நேரடியாக ஆட்சி செய்த சந்திரிகா அம்மையார், இனிவரும் காலம் முழுவதும் மறைமுகமாக ஆட்சி செய்யப் போகின்றார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் ஜனாதிபதி மைத்திரி கொடுத்த ஆதரவு தொடர்ந்தும் ரணில், சந்திரிகா அம்மையாருக்கு கொடுப்பாரா? என்பது கேள்விக்குறியாகும்.

காரணம் மைத்திரிக்கும், சந்திரிகா அம்மையாருக்கும் இடையில் காணப்படுகின்ற உறவுக்கும், ரணிலுக்கும், சந்திரிக்கா அம்மையாருக்கும் இடையில் காணப்படுகின்ற உறவுக்கும் வித்தியாசம் இருக்கின்றது.

இனி அதன் வீரியம் எப்படி அமையும் என்பதனை காலமும், சூழ்நிலையும்தான் தீர்மானிக்கும்.

முடிவாக, இப்பொதுத் தேர்தலில் சந்திரிகா அம்மையாரின் தாக்கமும், செல்வாக்கும் எவ்வளவு தூரம் தாக்கம் செலுத்தப்போகின்றது என்பது, ஓகஸ்ட் 17 ஆம் திகதி அனைவருக்கும் புலனாகும் என்பதில் ஐயமில்லை.

அன்று தெரியும் சந்திரிகா அம்மையார் செல்லாக்காசா? அல்லது செல்லுப்படியாகும் காசா? என்று.

திவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் சர்வோதயத்தில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

**நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பிலான சர்வதேசக் கண்காணிப் பாளர்கள் யாழ்.சர்வோதயத்தில் கலந்துரையாடல் ஒன்றை நேற்று நடத்தியுள்ளனர்.**

தாய்லாந்தை தலைமையகமாகக்கொண்டு இயங்கும் சுயாதீன தேர்தலுக்கான ஆசிய வலையமைப்பு எனும் சர்வதேச கண்கா ணிப்பாளர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளனர்.

இம்மாதம் இடம்பெற இருக்கும் பாராளுமன்ற பொதுத்தேர்தலை கண்காணிக்கும் பணிக்காக தேர்தல்கள் ஆணையாளர் சர்வதேச கண்காணிப்பாளர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இதற்கமைவாக நாட்டிற்கு வருகைதந்திருக்கும் கண்கா ணிப்பாளர்கள் தமது பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பில் ஆராயும் பொருட்டு விஜயம் செய்திருந்த குறித்த கண்காணிப்பு குழுவினர் சர்வோதயம் அமைப்பின் யாழ்.மாவட்ட இணைப்பாள எஸ்.யுகேந்திரனுடன் கலந்துரையாடியுள்ளனர்.

குறித்த குழுவில் பேராசிரியர் கபில்மன் செரிஸ்த(Kapil Man Shrestha). கசுஹி மியாஷாஹி(Kazuki Miyazaki) உள்ளிட்ட வர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இடம்பெற இருக்கும் பாராளுமன்ற பொதுத்தேர்தல் கண் காணிப்புப் பணிகளில் சர்வோதயம் அமைப்பானது பவ்ரல் அமைப்புடன் இணைந்து நாடளாவிய ரீதியில் செயற்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நேற்று யாழ்.சர்வோதயத்திற்கு விஜயம் செய்திருந்த சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் யாழில் தேர்தல்கள் தொடர்பில் இதுவரையில் இடம்பெற்றிருக்கும் வன்முறைகள். மற்றும் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடியுள்ளனர்.

அதேவேளை யாழ்.சர்வோதயம் அலுவலகத்தில் பிரத்தியேகமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தேர்தல்கள் கண்காணிப்பு அலுவலகத்தையும் பார் வையிட்டிருந்தனர். (இ-9)

# டைனமற் பாவித்து மீன்பிடித்த இருவர் குருநகரில் கைது

## 75 கிலோ மீனும் அகப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் கடற் பகுதியில் சட்டவிரோதமான முறை யில் டைனமற் பாவித்து மீன்பிடித்த சந்தேகத்தின் பேரில் அதே இடத்தை சேர்ந்த இருவர் யாழ். பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து டைனமற் பாவித்து பிடிக் கப்பட்ட 75 கிலோ மீனும் 200 கிராம் ரி.என்.ரி.ரக வெடிமருந்தும் வெடிக்க வைக்கும் கருவி (டெற்ரனேற்றர்கள்), அவர்கள் பயன்ப டுத்திய படகுகளும் இயந்திரமும் பொலிஸாரால் கைப்பற்ற ப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள் நீதவான் வாசஸ்தலத்தில் முன்னி லைப்படுத்தப்படவுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ள னர். (இ-9)

## நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்

### பெறுகைகளுக்கான அழைப்பு

நந்தவனம் பாதுகாப்பு இல்லம் கிளிநொச்சி மற்றும் சிறிலிய செவன சிறுவர் இல்லம் வவுனியா என்பவற்றிற் கான புதிய உலர் உணவுப் பொருட்கள் விநியோகமும் தொற்று நீக்கிப் பொருட்கள் விநியோகமும்- 2015/2016

01.வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான தகைமை வாய்ந்த புதிய உலர் உணவுப் பொருட்கள், சமைத்த உணவு மற்றும் தொற்று நீக்கிப் பொருட்கள் விநியோகத்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வரும் நிறுவனங்களுக்குக் கோருகின்றார்.

| தொடர் இல | பெறுகை இல. | நிறுவனங்கள் | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|
| 01 | NP/30/02/02Food/03 | நந்தவனம் பாதுகாப்பு இல்லம்-கிளிநொச்சி | 50,000 |
| 02 | NP/30/02/02Food/04 | சிறிலிய செவன சிறுவர் இல்லம்- வவுனியா | 50,000 |

02.விலைக் கேள்விதாரர் உலர் உணவு விநியோகத்திற்கான வியாபார பதிவுடைய ஒரு நபராக அல்லது தனிப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

03. விண்ணப்பிப்பவருக்கு ஆகக் குறைந்தது ஒருவருடம் அரசாங்க நிறுவனத்திற்கு இடையீடின்றி உலர் உணவு வழங்கிய பூரண அனுபவமிருத்தல் வேண்டும்.

04.பொருத்தமான உத்தரவாதமுறி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனியாக பெறப்பட்டு பெறுகைக ளுடனும் வெவ்வேறாக இணைக்கப்படல் வேண்டும். தனித்தனியாக உத்தரவாதமுறி சமர்ப்பிக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

05.நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர் இத்திணைக்களத்தில் கிடைக்கும் "Application for Bid Documents" என்ற படிவத்தினை ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனியாக பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ஒவ்வொன்றுக்கும் ரூபா. 500/= னை காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 10.08.2015 தொடக்கம் 21.08.2015 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். மேலும் 14.08.2015 முற்பகல் 10.00 மணிக்கு திணைக்களத்தில் இடம்பெறும் விலைக் கேள்விகள் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டத்திலும் கலந்து கொள்ளலாம்.

06. விலைக் கேள்விகள் 26.08.2015 ஆம் திகதி 14.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத் திணைக்களத்தில் ஆணையாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

07. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலும் விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ் காட்டப்பட்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே.இல. 021 222 8321)

08.கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகள் நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

தி.விஸ்வரூபன்
தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,
நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் வ.மா,
மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:-021 205 7102, தொலைநகல்:- 021 205 7103

(சி-1774)

## புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் 90 ஆம் நாள் நினைவஞ்சலி-10.08.2015

### அமரர் சிவலோகநாதன் வித்தியா



அன்று!
ஊரெல்லாம் உனக்காய் அணிதிரண்டு வந்தார் பாரெல்லாம் உனக்காய்
படையெடுத்து வந்தார் ஏழாறுகள் ஒன்றிணைவதுபோல்
அலையாய் ஒன்றிணைந்தார்
வித்தியாவின் நீதிக்காய் வீதிகள் வெள்ளமாயின
அம்மா! இப்போது எல்லாம் அடங்கிவிட்டது
அலைகளை காணவில்லை அதன் தடங்களைத் தேடுகிறார்
பாடசாலைக்குச் செல்லும் வித்தியாக்கள்...

(1437)

என்றென்றும் உன்நினைவுடன்
அன்புச் சகோதரனுடன் ஆசிரியர் சமூகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள பதின்ம வயதுச் சிறுமியின் திருமணம்

கடத்தப்பட்டு அல்லது காணாமல் போயிருந்த தனது மகளை நீதிமன்றத்தில் கொண்டு வந்து காட்டுமாறு கோரி, தாயார் ஒருவர் யாழ்.மேல் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனு தொடர்பான விசாரணைகளின் போது, காணாமல் போனதாகத் தெரிவிக்கப்பட்டிருந்த 17 வருடம் 2 மாதம் வயதுடைய பெண் கழுத்தில் தாலியுடனும் 6 மாதக் கர்ப்பத்துடனும் தனது காதலனுடன் நீதிமன்றத்தில் பலரும் பார்த்திருக்க வந்து நின்றார். இந்த வழக்கில் நீதிபதி இளஞ்செழியன் அளித்துள்ள தீர்ப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதேநேரம், 17 வருடம் 2 மாதம் நிறைந்த திருமண வயதை எட்டாத அந்தப் பெண்ணை அவருடைய விருப்பப்படி, அவருடைய காதலனுடன் (தாலி கட்டிய கணவன்) செல்ல அனுமதித்தன் மூலம் 18 வயதுக்குக் குறைந்தவர்களின் தாலி திருமணம் செல்லுபடியானதா என்ற ஒரு மயக்க நிலையை ஏற்படுத்தியிருந்தது.

இதனை சமூகத்திற்குத் தெளிவுபடுத்தும் வகையில் இந்த வழக்கு விசாரணையின்போது எழுந்திருந்த சட்ட ரீதியான விவாதம், கேள்விகள் பற்றிய விபரங்களை வெளியிட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இந்த வழக்கு விசாரணையின் போது சட்டரீதியான பல்வேறு விடயங்கள் கவனத திற் கொள்ளப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது, அத்தகைய கவனிப்பின் அடிப்படையிலேயே நீதிபதி இளஞ்செழியன் 18 வயதுக்குக் குறைந்த தாலித் திருமணம் செல்லுபடியற்றது. அதனை ரத்து செய்யும் அதிகாரம் மாவட்ட நீதிமன்றத்திற்கே உள்ளது என தெரிவித்தார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 141 ஆம் பிரிவின் கீழ் இந்த ஆட்கொணர்வு மனுவை காணாமல் போயிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்த பெண்ணின் தாயார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

வழக்கு விசாரணையின் போது, அந்தப் பெண் தனது காதலுடன் சட்டத்தரணியின் ஊடாக மன்றில் ஆஜராகினார். அப்போது அவருடைய சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி, இந்தப் பெண்ணுக்கு 17 வருடம் 2 மாத வயதாகின்றது. இவர் இந்து சமயாசாரப்படி, தாலித்திருமணம் செய்துள்ளார். ஆறு மாதக் கர்ப்பிணியாகவும் உள்ளார் என தெரிவித்தார்.

இதனையடுத்து, 18 வயதுக்குக் குறைந்த தாலித் திருமணம் சட்டப்படி செல்லுபடியானதா என்ற சட்ட விவாதம் மன்றில் எழுந்தது.

அப்போது, பொதுத் திருமணக் கட்டளைச் சட்டத்தின்படி 18 வயதுக்குக் குறைந்த பதிவுத் திருணம் செல்லுபடியற்றது. குணரட்னம் எதிர் பதிவாளர் நாயகம் வழக்கில் நீதியரசர் ஷிராணி திலகவர்தன 18 வயதுக்குக் குறைந்த பதிவு திருமணம் செல்லுபடியற்றது என தீர்ப்பளித்துள்ளார். எனவே, எந்தவிதமான திருமணமும் 18 வயதுக்குக்குறைந்ததாக இருந்தால் தேச வழமைச் சட்டம், பொதுத் திருமணக் கட்டளைச்சட்டம் என்பவற்றின் அடிப்படையில் அது செல்லுபடியற்றது.

எனவே, இந்த வழக்கில் 17 வருடம் 2 மாதம் வயதுடைய பெண் செய்துள்ள தாலித் திருமணம் சட்டப்படி செல்லுபடியற்றது. இதனை இரத்து செய்யும் அதிகாரம் சிவில் நீதிமன்றமாகிய மாவட்ட நீதிமன்றத்திற்கு மட்டுமே உண்டு, எனவே இந்த தாலித் திருமணத்தை இரத்து செய்ய வேண்டுமானால் மாவட்ட நீதிமன்றத்திற்கே செல்ல வேண்டும் என்று நீதிபதி இளஞ்செழியன் தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

18 வயதுக்குக் குறைந்த தாலி திருமணத்தை இரத்து செய்வது, பிறக்கப்போகும் குழந்தையின் நெறிமுறையான, சட்டரீதியான தன்மை, 18 வயதுக்குப் பின்னர் செய்யப்பட வேண்டிய பதிவுத் திருமணம் என்பன சிவில் நீதிமன்றமாகிய மாவட்ட நீதிமன்றத்திலேயே தீர்க்கப்பட வேண்டும்.

மேல் நீதிமன்றத்தில் எங்கள் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பிள்ளையைக் காணவில்லை என்ற ஆட்கொணர்வு மனு வழக்காகும்.

வழக்கு விசாரணைகளின்போது, பிள்ளையை உயிருடன் மன்றில் நிறுத்தியுள்ளார்கள். பிள்ளை 17 வருடம் 2 மாதம் என்ற காரணத்தினால், அந்தப் பிள்ளையின் தாலித் திருமணம் சட்டரீதியானதல்ல. இந்தப் பெண், கர்ப்பமாக இல்லாதிருந்தால், சிறுமி என்ற அடிப்படையில் அவருடைய பாதுகாப்புக்கான பொறுப்பை, நீதிமன்றம் அவருடைய தாயாரிடமே வழங்கியிருக்கும். ஆனால் அப்பெண் கர்ப்பிணியாக இருப்பதனால் நாளை பிறக்கப்போகும் குழந்தைக்குத் தந்தை, யார் என்ற கேள்வி எழுப்பப்படும். எனவே, ஆட்கொணர்வு மனுவின் விதிவிலக்கான காரணங்களின் அடிப்படையில் அந்தப் பெண் காதலனுடனேயே செல்ல விரும்புவதனால் அதற்கு அனுமதி வழங்கப்பட்டது என நீதிபதி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 80 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 300 | 220 |
| தக்காளி | 100 | 80 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 60 | 60 |
| கோவா | 40 | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 100 | 160 | 140 |
| பூசணி | 40 | 30 | 60 | 40 |
| புடோல் | 40 | 30 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 140 | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 100 | 100 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 100 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 100 | 120 |
| பயற்றங்காய் | 20 | 40 | 40 | 40 |
| லீக்ஸ் | 60 | 60 | 100 | 80 |
| பீற்றூட் | 40 | 30 | 80 | 90 |
| கறிமிளகாய் | 100 | 150 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 50 | 100 | 100 | 100 |
| போஞ்சி | 180 | 140 | 200 | 140 |
| கத்தரிதம்புள்ள | 20 | 60 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 15 |
| தேசிக்காய் | 40 | 50 | 120 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25-40 | 50 | 30-40 | 40 |
| இராசவள்ளி | 200 | 120 | – | 120 |
| வெங்காயப்பூ | 100 | 150 | 200 | 160 |
| முள்ளங்கி | 40 | 20 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 458

Search for people, places and things Nagendram Home


மிது மிதுலா




வேந்தன் பெருமாள்





கமல் நந்தினி




ரவி ராஜா




சுயன் மகேந்திரன்




சந்திரா தங்கராசா





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுப்பாவனையிலிருந்து தமிழகத்தை மீட்க வேண்டும்

## வைகோ அறைகூவல்



(ஈரோடு)

**திராவிட இயக்க கருத்து பட்டறைக்கு வித்திட்டவர் தந்தை பெரியார். 1928 இல் ஈரோடு ரெயில் நிலையம் அருகில் சுய மரியாதை பிரசார போதனை கூட்டத்தை அவர் நடத்தினார். அப்போது இருந்ததை விட இப்போது 1000 மடங்கு போதனை தேவைப்படுகிறது. மூடநம்பிக்கை, மதுபாவனை ஒழுக்கக் கேடு, பண்பாடு அழிவு போன்றவற்றால் தமிழகம் சீரழிந்து வருகிறது. எனவே இதிலிருந்து தமிழகத்தை மீட்க வேண்டும் என்று வை.கோபாலசாமி தெரிவித்துள்ளர்.**

மதுவின் கோரப்பிடியில் இருந்து தமிழகத்தை மீட்க வேண்டும். காந்தியவாதி சசிபெருமாள் படிப்படியாக தமிழகத்தில் மதுவிலக்கை கொண்டு வர போராடினார். ஆனால் அவரை கொன்று விட்டார்கள். எதிர்வரும் 15 ஆம் தததி முதல் முதற்கட்டமாக தமிழகத்தில் மதுக் கடைகளின் நேரம் மாற்றி அமைக்கப்படும் என்றும் பாடசாலைகள், கல்லூரிகள், ஆலயங்கள் அருகில் மதுக்கடைகள்- பார்கள், நெடுஞ் சாலைகளில் உள்ள மதுக்கடைகள் மூடப்படும் என்றும் முதலமைச்சர் ஜெயலலிதா அறிவிக்க உள்ளார்.

இதுபற்றி உச்சநீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டது. இதை ஏன் அப்போதே தமிழக அரசு செய்யவில்லை. 4 ஆண்டுகளுக்கு பிறகு தான் ஞானோதயம் ஏற்பட்டதா?

மதுக்கடைகளின் நேரம் குறைக்கப்படுவதால் கள்ளச்சந்தையில் அதிக விலைக்கு மதுவை வாங்கும் நிலை தான் ஏற்படும். எனவே தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும்.

முதல்வர் ஜெயலலிதா ஆரோக்கியமாக பழைய மிடுக்கோடு வருகிறார் என்பது சந்தோஷமான விஷயம். இதற்கு நான் பெருமைப்படுகிறேன். பிரதமர் மோடி சென்னைக்கு வந்தபோது அவரை காத்திருந்து ஜெயலலிதா வரவேற்றுள்ளார். மேலும் அவருக்கு உணவு பரிமாறி உள்ளார். இது தமிழ் பண்பாடு. இதை வரவேற்று பெருமைப்படுகிறேன்.

ஆனால் மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் இறுதிச் சடங்கில் அவர் ஏன் கலந்து கொள்ளவில்லை? மதுரை வரை வந்தாவது கலாம் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தி இருக்கலாமே? அப்போது அவரது உடல் நிலை சரியில்லை என்று கூறி இருப்பது கண்டிக்கத்தக்கது. ஈழ தமிழர்களை பற்றி மோடியும், ஜெயலலிதாவும் என்ன பேசினார்கள் என்பதை வெளியுலகுக்கு தெரிய படுத்த வேண்டும். இவ்வாறு வைகோ கூறியுள்ளார் (3-7)

# யாகூப் மேமனுக்கு தூக்கு நீதிபதிக்கு மிரட்டல் கடிதம்

(புதுடில்லி)


தனது தூக்கு தண்டனையை நிறுத்திவைக்க கோரி கடைசி நேரத்தில் யாகூப் மேமன் தாக்கல் செய்த திருத்த மனுவை நிராகரித்த நீதிபதிக்கு மிரட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதையடுத்து அவருக்கு பாதுகாப்பு பன்மடங்கு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மும்பையில் கடந்த 1993 ஆம் ஆண்டு மார்ச் 12ஆம் திகதி 13 இடங்களில் இடைவிடாமல் பிற்பகல் 3.40 மணி வரை குண்டு வெடிப்பு சம்பவங்கள் நிகழ்ந்தன. இந்தியாவையே உலுக்கிய இந்த சம்பவத்தில் மொத்தம் 257 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். 713 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த கொடூர தாக்குதலுடன் தொடர்புடையை தீவிரவாதி யாகூப் மேமன் கடந்த 30 ஆம் திகதி தூக்கிலிடப்பட்டார்.

முன்னதாக, யாகூப் மேமனின் கருணை மனுவை இரண்டாவது முறையும் ஜனாதிபதி நிராகரித்ததால், இறுதி நேரத்தில் உச்ச நீதிமன்றத்தில் தூக்கு தண்டனையை நிறுத்தி வைக்க கோரி அவரது சார்பில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. இதையடுத்து நள்ளிரவு இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்து தூக்கை உறுதி செய்தது. யாகூப் மேமனின் மேற்கண்ட மனுவை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான அமர்வு விசாரித்து யாகூப் மேமனின் தூக்கு தண்டனையை உறுதி செய்தது.

இந்த நிலையில், யாகூப் மேமன மனுவை தள்ளுபடி செய்த அமர்வுக்கு தலைமை வகித்த நீதிபதி தீபக் மிஸ்ராவுக்கு மிரட்டல் கடிதம் வந்துள்ளது. பெயர் எதுவும் இல்லாமல் வந்துள்ள அந்த கடிதத்தில் நீதிபதி தீபக் மிஸ்ராவின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டாலும் அவரை குறிவைத்துள்ளோம் என்று எழுதப்பட்டுள்ளது. இதையடுத்து நீதிபதி தீபக் மிஸ்ராவின் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (3-7)

## பாரதச் செய்தி



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்றைய தினம் பீகார் மாநிலத்திற்கு விஜயம் செய்திருந்தார். இதன்போது அவர் பீகார் முதலமைச்சர் நிதீஷ்குமாருடன் உரையாடுவதை படத்தில் காணலாம்.

# காஷ்மீர் பிரச்சினையில் சீனா தலையிடக்கூடாது

## இந்தியா வலியுறுத்து

(சென்னை)

இந்தியாவின் காஷ்மீர் பிரச்சிணையில் சீனா தலையிடக்கூடாது என இந்தியா தெரிவித்துள்ளது.

காஷ்மீர் பிரதேசம் தொடர்பாக நிலவிவரும் முரண்பாடுகளில் சீனா எந்த விதத்திலும் தலையிடத் தேவையில்லை.

இதேவேளை, தற்போது காஷ்மீர் சீனர்களின் வருகை அதிகரித்துள்ளது. வழமைக்கு மாறாக இந்த அதிகரிப்பு காணப்படுகிறது. மேலும் இந்திய கடற்பிராந்தியத்தில் சீனக் கப்பல்களின் நடமாட்டமும் வெகுவாக அதிகரித்துள்ளது.

எனவே இவ்வாறாக பிராந்தியத்தில் ஒரு பதற்றமான சூழலை ஏற்படுத்துவதை சீனா நிறுத்த வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளதாக இந்தியா வலியுறுத்தியுள்ளதாக சர்வதேச செய்தி ஸ்தாபனம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அதேவேளை அண்மைக் காலமாக இந்தியப் பெருங்கடல் முழுவதும் தனக்கே என்று இந்தியா சொந்தம் கொண்டாடக்கூடாதென சீனா ஏற்கனவே எச்சரிக்கைத் தொனியுடன் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

# சூனியம் வைத்ததாகக் கூறி ஒரே இரவில் 5 பெண்கள் கொலை

## ஜார்க்கண்ட் மாநிலத்தில் கொடூரம்

(ராஞ்சி)

மூடநம்பிக்கைக்கு பெயர்போன ஜார்க்கண்ட் மாநிலத்தில் சூனியம் வைப்பதாக சந்தேகித்து சாமியார்கள், குறிசொல்பவர்கள் கொல்லப்படுவது அதிகரித்து வருகிறது. அந்த வகையில், நேற்று முன்தினம் இரவு தலைநகர் ராஞ்சி அருகில் இருக்கும் கான்ஜியா கிராமத்தைச் சேர்ந்த ஒரு கும்பல், கைத்தடி மற்றும் கூர்மையான ஆயுதங்களால் நடத்திய கொலை வெறி தாக்குதலில் 5 பெண்கள் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

நேற்று காலை இதுபற்றிய தகவல் அறிந்து, அந்த கிராமத்துக்கு விரைந்துச் சென்ற பொலீஸார், பிரேதங்களை கைப்பற்றி, பரிசோதனைக்கு அனுப்பி வைத்து, வழக்குப்பதிவு செய்து, விசாரித்து வருகின்றனர். இந்த படுகொலைக்கு முதலமைச்சர் ரகுபர்தாஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மாநில மகளிர் ஆணையமும் கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும, இதுபோன்ற சம்பவங்களை தடுத்து நிறுதத வலிமையான கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மகளிர் ஆணையத் தலைவி மாகுவா மஞ்சி குறிப்பிட்டுள்ளார்.

போதிய கல்வியறிவின்மை, நகரங்களுக்கான சாலை வசதி இல்லாமை, வேலைவாய்ப்பினமை மற்றும் விழிப்புணர்வு இல்லாமை போன்ற சில காரணங்கள்தான் மக்களின் மூடநம்பிக்கைக்கு காரணம் என்றும் அவர் வேதனை தெரிவித்தார்.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கான மதிய உணவு சமைப்பதில் அதிக அக்கறை காட்டுவதை விடுத்து, நல்ல கல்வியை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் மகளிர் ஆணைய தலைவி வலியுறுத்தினார்.

கடந்த 2000-ம் ஆண்டிலிருந்து 2012 வரை சூனியம் வைப்பதாக சந்தேகித்து 2,097 பேர் இந்த மாநிலத்தில் இதுபோல் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

# காஷ்மீரில் மோதல் இந்திய வீரர் பலி

(ஸ்ரீநகர்)

எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தினரின் தொடர் அத்துமீறல், இந்தியாவுக்குள் ஊடுருவி நாசவேலையில் ஈடுபட திட்டமிட்டு, எல்லை வழியாக ஊடுருவத் துடிக்கும் பாகிஸ்தான் தீவிரவாதிகளின் சதி வேலை ஆகியவற்றை முறியடிப்பதற்காக கடுமையாக போராடி வரும இந்திய இராணுவ வீரர்கள் காஷ்மீரில் இரகசியமாக இயங்கி வரும் உள்நாட்டு தீவிரவாதிகளையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இந்நிலையில், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் இந்தியா-பாகிஸ்தான் எல்லைக்கோட்டுப் பகுதி அருகே அமந்துள்ள குப்வாரா மாவட்டத்தின் தங்டார் செக்டரை ஒட்டியுள்ள தயா காட்டுப் பகுதியில் சில தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்து, இந்திய இராணுவத்தினர் நேற்று முன்தினம் மாலை அங்கு விரைந்தனர்.

காட்டுக்குள் பதுங்கியிருந்த தீவிரவாதிகளை அவர்கள் சுற்றி வளைத்தனர். இராணுவ வீரர்களிடம் பிடிபடாமல் இருப்பதற்காக அவர்களை நோக்கி தீவிரவாதிகள் துப்பாக்கிகளால் சுட்டு தாக்குதல் நடத்தினர். இந்திய இராணுவத்தினரும் பதிலுக்கு துப்பாக்கிகளால் சுட்டு எதிர் தாக்குதல் நடத்தினர்.

நேற்று அதிகாலை வரை நீடித்த இந்த சண்டையில் இந்திய இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்ததாக அடைந்ததாக முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. தொடர்ந்து அப்பகுதியில் துப்பாக்கிச் சண்டை நடந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக்கூறி மகிந்த வாக்குகளைப் பெற சதிமுயற்சி



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என கூறி மக்களுக்கு அச்சத்தையேற்படுத்தி அதன் ஊடாக வாக்குகளை பெற்றுக் கொண்டு பிரதமராக முயற்சிப்பதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இன்று மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் காற்று இறங்கிவிட்டது. அவர் என்ன கனவு கண்டாலும் எதிர்வரும் தேர்தலின் பின்னர் எங்கள் நாட்டின் பிரதமர், எங்கள் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே என அவர் தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு குறித்து கருத்து வெளியிடும் மகிந்த ராஜபக்ஷ எங்கள் கட்சியில் பாதாள குழுக்கள் செயற்படுவதாக கூறுகின்றாரர.

எங்கள் கட்சி பாதாள குழுக்களுக்கு இடமளிக்காது என மிக தெளிவாக கூறுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட இடமளிக்கமாட்டோம்

## சம்பிக்க ரணவக்க கூறுகிறார்

**நாட்டின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பக் கூடிய அரசாங்கத்தை அமைப்போம் எனவும் நாட்டின் தேசிய பாதுகாப்பை ஆபத்தில் தள்ள இடமளிக்கப் போவதில்லை எனவும் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

நாட்டின் பிள்ளைகளின் வாழ்க்கையும் மக்களின் வாழ்க்கையையும் நல்ல நிலையில் வைத்திருப்பதா அல்லது கெடுதியான பயணத்தை நோக்கி செல்வதா என்பதை இம்முறை தேர்தலில் மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

மகரகமவில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை ஆபத்தில் தள்ள இடமளிக்கப் போவதிலலை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்தால், விடுதலைப் புலிகள் விமானத்தில் வந்து இறங்கி விடுவார்கள் என்பது போல் கதைத்தனர். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை.

நாட்டின் எதிர்காலத்தை கட்டியெழுப்பக் கூடிய அரசாங்கத்தை அமைத்து ஜனாதிபதியுடன் செயற்படக் கூடிய பிரதமரை நியமிக்க ஐக்கிய தேசிய முன்னணியினால் மாத்திரமே முடியும் எனவும் சம்பிக்க ரணவகக மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# பூச்சாண்டிகளை உருவாக்கி அதிகாரத்தைப்பெற முயற்சி

## மகிந்த மீது ரவி குற்றச்சாட்டு

நாட்டை 10 வருடங்கள் ஆட்சி செய்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இன்னும் அர்த்தமில்லாத நிர்வாகத்திற்கு அதிகாரத்தை கோருவதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அடுத்த 5 வருடங்களுக்கு நாட்டை தயார்படுத்தியுள்ளது. மகிந்த அதிகாரத்தைப் பெற பூச்சாண்டிகளை உருவாக்கி வருகிறார். வன்முறையை உருவாக்கி வருகிறார் எனவும் தெரிவித்தார்.

தற்போது மிருகங்கள் மிருகக் காட்சிச்சாலையில் மட்டுமே உள்ளன. அதிகாரத்தை கோரும் மகிந்த நாட்டை எப்படி கொண்டு நடத்தப் போகிறார் என்பதைக் கூறுவதில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவிக்கு வந்து 6 மாதங்கள் மாத்திரமே கடந்துள்ளது. இந்த காலத்தில் நாட்டில் எத்தனை ஜனநாயக மாற்றங்கள் ஏற்பட்டன?.

எங்கள் பிரதமர் நாட்டை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தை முன்வைத்துள்ளார். இந்த வேலைகளை பூர்த்தி செய்யவே நாங்கள் 5 வருடங்களுக்கு அதிகாரத்தை கோருகிறோம்.

இன்னும் 5 வருடங்களில் பார்த்தால், எந்தளவுக்கு எங்களால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடிந்தது என்பதை அறிந்து கொள்ள முடியும்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் அதேவேளை அவர்களுக்குள்ள சகல அதிகாரங்களும் அதேவிதத்தில் பெற்றுக்கொடுக்க முயற்சித்து வருகிறோம் என நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். (இ-7)

# லசந்த கொலையின் பின்னணியில் முன்னாள் பாதுகாப்புப் பிரதானி

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் சதித்திட்டத்தின் பின்னணியில் முன்னாள் பாதுகாப்பு பிரதானி ஒருவர் இருப்பதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது.

அத்துடன் இந்த கொலையின் பின்னணியில் கடந்த அரசாங்கத்தின் சில முக்கியஸ்தர்கள் இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பான விசாரணைகள் தற்போது பெருமளவில் பூர்த்தியாகியுள்ளதாக பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அனைவரும் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் நாட்களில் அவர்கள் கைது செய்யப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் லசந்த விக்கிரமதுங்க பயணம் செய்த வாகனத்தை மோட்டார் சைக்கிளில் விரட்டிச் சென்று அவரை சுட்டுக் கொன்றதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் காலத்தில் இந்த கொலை நடந்ததுடன் பொலிஸார் அப்போது இந்தக் கொலை சம்பவம் குறித்து உரிய முறையில் விசாரணைகளை நடத்தவில்லை எனவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## ஆபத்து இல்லாத அளவுகோல்கள்

ஆசை இல்லாதவர்கள் என்று உலகத்தில் யாருமே இருக்க முடியாது. மனிதர்களில் ஆசை உள்ளவர்கள் ஆசையை அடக்க முயற்சி செய்பவர்கள். ஆசையை அடக்குவதில் ஓரளவு வெற்றி பெற்றவர்கள் என்று மூன்று வகையினர் உண்டு, இந்த மூன்று பேருக்குள்ளும் ஆசைகள் உண்டு. காரணம் ... அப்பாவும் அம்மாவும் அந்த ஒரு கணம் ஆசையில்லாமல் இருந்திருந்தால் நாம் பிறந்திருக்கவே மாட்டோம். நம் பிறப்புக்குக் காரணமே பெற்றோர்களின் ஆசை. ஆசையால் பிறந்த நாம் ஆசை இல்லாமல் இருக்க முடியுமா? முடியாது... சுலபம் அல்ல.

ஒரு குடும்பத்தை நிர்வாகம் செய்வது போல கம்பனியை நடத்துவதுபோல நாட்டை ஆட்சி செய்வது போல நமது ஆசைகளை அடக்கி ஆட்சி செய்ய நாம் பழக வேண்டும். பொறிகளின் மீது தனி அரசாணை என்று இதையே பாரதியார் பாடுகின்றார். மெய், வாய், கண், மூக்கு, செவி என்கிற ஐந்து பொறிகளை அதனதன் விருப்பப்படி திரிய விடாமல் நமது அறிவின் ஆணைக்குள் கொண்டுவர வேண்டும்.

ஆமை தன் ஓட்டுக்குள் நான்கு கால்களையும் தலையையும் உள்ளே இழுத்துக்கொண்டு எதிரிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ளும். இதைப்பார்த்த திருவள்ளுவர் ஒருமையுள் ஆமை போல் ஐந்து அடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப்புடைத்து என்று பாடினார். ஏமாப்பு என்றால் பாதுகாப்பு என்று பொருள்.

ஒரு எருமை இருந்தாலே அந்த இடம் அசிங்கமாகிவிடும். என்னிடம் ஐந்து எருமைகள் இருந்து அசிங்கப்படுத்துகிறதே என்று ஐந்து பொறிகளை (மெய், வாய், கண், மூக்கு,செவி) எருமைகள் என்று பாட்டால் அடிக்கிறார் பட்டினத்தார்.

இன்றைக்கு நம்மில் பலபேர் கண், காது, வாய் எதையும் கட்டுப்படுத்துவதேயில்லை. என் நண்பர் ஒருவருக்கு வயிற்றுவலி. வைத்தியரிடம் போனார். மருந்து கொடுத்துவிட்டு லைட்டா (மென்மையான) ஏதாவது ஆகாரம் சாப்பிடுங்கள். கனமாக வேண்டாம் என்றார் வைத்தியர். வாய் ருசியை அடக்க முடியாத நண்பர் ஹோட்டலுக்குப் போய் வடை, போண்டா என்று விளாசித் தள்ளிவிட்டார். வலி அதிகம் ஆகிவிட்டது. டாக்டரிடம் நடந்ததைச் சொன்னார். டாக்டர் கோபப்பட்டு லைட்டா சாப்பிடுங்கன்னா ஹெவியா சாப்பிட்டது சரியா? என்று திட்டிவிட்டார். நண்பரோ டாக்டர்... தண்ணியை விட எண்ணெய் லைட்டு. அதனால்தான் எண்ணெய் தண்ணியில மிதக்குது. லைட்டா இருந்தாத்தானுங்க மிதக்கும்... எண்ணெயைவிட போண்டா லைட்டு ஏன்னா.. எண்ணெயில போண்டா மிதக்குதே என்று தம் விஞ்ஞான விளக்கத்தை வழங்கி டாக்டரையே சிரிக்க வைத்தார். உண்மை இதுதான் ஆசையை அடக்க முடியவில்லை. அவஸ்தைப்படுகிறார்.

ஆசையே இல்லாமல் இருக்கமுடியாது. ஆனால் ஆசையை நமக்குள் கட்டுப்படுத்தி நிர்வாகம் பண்ணமுடியும். ஆசை நமக்குள் இருக்கட்டும். நாம் ஆசைக்குள் போய் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது. நமக்குள்ளே ஆசையிருந்தால் ஆபத்தில்லை. ஆசைக்குள்ளே நாம் போய் விட்டால். ஆபத்து... ஆபத்துதான்.

வேதாத்திரி மகரிஷி என்கிற பெரியவர் ஆசைகளைச் சீரமைத்தல் என்பதை வகுப்புக்களாக நடத்தி மக்களை நெறிப்படுத்தி வருகிறார். எல்லா ஆசைக்கும் அடிநாதம் காமம் என்கிற பால் உணர்ச்சி ஆசையே. அதை ஒழுங்குபடுத்திக்கொண்டால் எல்லாமே ஒழுங்காகி விடும். ஒத்தமனம் உடையவர்கள் முறையாகக் கலந்து இன்பம் துய்ப்பது தவறில்லை. தன்னுடைய காமவெறியைத் தணித்துக் கொள்ளும் ஒரே நோக்கோடு இணைதேடும் மூர்க்கர்கள் மிருகங்கள் மாதிரி.

தெருவில் பயந்து கண் மிரண்டு ஒதுங்கும் பெண் நாயை பல ஆண் நாய்கள் துரத்துகிற கொடுமையான காட்சிகளை நாம் காண நேருகிறது. நாயைப்போன்ற மிருகங்களின் சமூகத்தில் தன் இணையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெண்ணுக்கு ஒருபோதும் கிடைப்பதில்லை. வலிமை வாய்ந்த ஆண்விலங்கு, மற்றைய ஆண் விலங்குகளை அதட்டிக் குதறி, கிழித்து அச்சுறுத்தி விலக்கிவிட்டு வலிந்து தன் இணையை அடையும்.

இன்றைக்கும் ஒரு பெண்ணை ஸ்கூட்டரிலும் ஆட்டோவிலும் கூட்டம் கூட்டமாகத் துரத்துகிற– அதற்காகச் சண்டையிடுகிற ஆண்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஓநாய், நாய் என்கிற விலங்குகளை ஒத்தவர்கள். பெண்ணும் ஆணும் ஒருவரை ஒருவர் விரும்பி தேர்ந்தெடுக்கும் காதலுக்கு மரியாதை தராது தன் இணையை வலிந்து அடையும் ஒவ்வோர் ஆண்மகனும் ஓநாய் மனிதனே! கற்பைச் சூறையாடுகிற கயவர்கள். மகளையே பாழாக்கிய தந்தை என்கிற மிருகம் பற்றியெல்லாம் பத்திரிகையில் செய்தி வருகிறதே... உடம்பால் மனிதனாகிய பலர் உணர்வால் மனிதனுக்குரிய உயர் நிலை பெறாத கொடுமையையே இது விளக்கும். ஒரு பெண் தன்னை விரும்பாத நிலையில் அவளைத் திருட்டுத்தனமாகத் தொட்டுப்பார்க்கத் துடிப்பது சரியா? இவற்றையெல்லாம் யோசித்தால் வாழ்க்கையில் அறிவு பூர்வமான முடிவுக்கு முன்னுரிமை கொடுத்தால் மனிதனும் தெய்வமாகலாம்.

பெண்விலங்கின் விருப்பு வெறுப்பு பற்றிக் கவலைப்படாமல் உணர்ச்சி மேலோங்க உறவுக்கு வற்புறுத்தும் ஆண்விலங்கு மாதிரி மனைவியைத் துன்புறுத்தும் கணவன்மார்கள் உலகத்தில் உண்டு. மனித வாழ்வில் காமம் இரண்டாம் பட்சம். காதல் முதல் பட்சம். காதல், அன்பு இவற்றுக்கு முதலிடம் கொடுக்கிற பண்புதான் மனித இனத்தின் அடையாளம்.

தான் காதலித்த பெண் தன்னைக் காதலிக்கவில்லை என்று அவளைக் கொன்றவர்கள் காட்டுமிராண்டிகள். தன் காதலைப் புறக்கணித்த பெண் யாரைக்காதலிக்கிறாளோ அவனுக்குத் துன்பம் வந்தபோது இரத்ததானம் செய்து காப்பாற்றி அவனை அவளிடம் ஒப்படைக்கிற தெய்வீக குணம் கொண்டவர்களும் மனிதரில் அவர்கள் மனிதரில் தெய்வம் உண்டு. காட்டுமிராண்டிகளுக்கு உடல்சுகம்தான் முக்கியம். மனிதருக்கு மன மகிழ்ச்சிதான் முக்கியம். தெய்வத்துக்குப் பிறர் மகிழ்ச்சிதான் முக்கியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டியை மாத்திரமா தென்னிலங்கை எதிர்க்கிறது?



இலங்கைத் தீவில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போதும இனச்சிக்கல் முடிவுக்கு கொண்டு வரப்படவில்லை. இன முரண்பாட்டிற்கும் யுத்தத்திற்கும் தீர்வாக சம உரிமையை வழங்குவதில் சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் பேரினவாத அடக்குமுறைப் போக்கை கடைப்பிடித்து வருகின்றனர்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் இணைக்கப்பட்டு சமஷ்டி தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனத்தில் விடுத்துள்ள கோரிக்கையை தென்னிலங்கை கடுமையாக எதிர்த்து வருகின்றது.

60 வருடகால இலங்கையின் இனப்பிரச்சினையின் பின்னரும் ஈழத் தமிழர்களின் உரிமை வேண்டிய போராட்டங்களின் பின்னரும் ஆயுதப் புரட்சியின் பின்னரும் தென்னிலங்கையில் இவ்வாறு எழும் எதிர்ப்புக்கள் அங்கு இன்னமும் எவ்வாறான அணுகுமுறையும் விட்டுக்கொடுப்பும் பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பிலான மனப்பாங்குகளும் உள்ளன என்பதைக் காட்டுகின்றன.

இலங்கை சிங்களவர்களை பெரும்பான்மையாகவும் தமிழ் பேசும் மக்களை சிறுபான்மையாகவும் கொண்ட நாடு. வெவ்வேறுபட்ட இனங்கள் வாழ்கின்ற இலங்கையில் ஒற்றையாட்சியில் அதிகாரத்தை குவிப்பதன் ஊடாக பெரும்பான்மை இனமே அதிகாரத்தை ஆளும் அனுபவிக்கும் நிலைமை காணப்படுகின்றது.

இதன் காரணமாக சிறுபான்மை இனங்களுக்கு அதிகாரம் மறுக்கப்படுவதுடன் அவர்கள் தொடர்ந்தும் இரண்டாம் தரப் பிரஜைகளாக வாழ நேரிட்டுள்ளது.

ஒரு இனம் முன்னேறவும் அந்த இனத்தின் சக சமத்துவ வாழ்வுக்கும் அரச அதிகாரம் இன்றியமையாது. இலங்கைத் தீவில் தமிழ் மக்களது சுய உரிமை சிங்களவர் தமிழர்களை ஆளும் அதிகாரமாக பிரயோகிககப்படுகிறது.

அந்நிய வருகையின் முன்னர் பிளவுண்டிருந்த இலங்கைத் தீவு பிரித்தானியர்களால் ஒற்றை ஆட்சியின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டது.



இலங்கைத் தீவு ஒற்றையாட்சியின்கீழ்கொண்டு வரப்பட்ட காலம் முதல் இலங்கை தமிழர்கள் தமக்கான அதிகாரத்தை அல்லது உரிமையை கேட்டு குரல் எழுப்பி வந்துள்ளனர்.

நாடு பிளவுபடுவதை தமிழ் மக்களே தவிர்த்தனர். எனினும் தமிழ் மக்களின் அந்த நல்லெண்ண வெளிப்பாட்டுக்கு பெரும்பான்மையினத்தால் ஏமாற்றப்பட்ட தமிழர்களது உரிமை மறுக்கப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்டனர்.

இதன் காரணமாக இழந்த அதிகாரத்தை இழந்த உரிமையை ஈழத் தமிழ் மக்கள் கோரும் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

அகிம்சைப் போராட்டங்களின் தோல்வியை தொடர்ந்து ஆயுதப் புரட்சி ஏற்பட்டது.


ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு சமஷ்டியை தீர்வாக இலங்கையின் முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்காவே முன்மொழிந்தார்.


அன்றைய இடதுசாரிக் கட்சிகள் தமிழருக்கு சமஷ்டி வழங்க பெரும் ஆதரவு தெரிவித்தன. எனினும் பேரினவாதிகளின் எதிர்ப்பால் அன்றைக்கு சமஷ்டி தீர்வு ஏற்படுத்தப்படவில்லை.

இலங்கையின் இனச்சிக்கல் காலம் தோறும் அதிகரித்தே வந்தது. அதிகாரத்தை பகிரும் உரிமையை மறுக்கும் பேரினவாதப் போக்கிற்கு எதிராக தனிநாடு கோரும ஆயுதம் ஏந்தும் போராட்டம் இலங்கைத் தீவில் ஏற்பட்டது.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனித் தமிழீழ நோக்கம் கொண்ட ஆயுதப் போராட்ட எழுச்சியின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடந்த பேச்சுவார்த்தையின்போது சமஷ்டி தீர்வினை வழங்க இணக்கம் தெரிவித்தார்.

2002 ஆம் ஆண்டில் ஒஸ்லோவில் நடந்த பேச்சுவார்தையின் போது செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திலும் இலங்கையில் வடக்கு கிழக்கை தாயகமாகக் கொண்டு ஓர் சமஷ்டி அலகை உருவாக்கும் ஒப்புதல் குறிப்பிடப்பட்டது. இலங்கை இனப்பிரச்சினைக்குக் காரணமான ஒற்றையாட்சிக்கும் அதனை எதிர்த்து தொடங்கப்பட்ட தனி நாடு கோரிய போராட்டத்திற்கும் இடையிலான ஓர் இணக்கமாக சமஷ்டி அமையப் பெறுகின்றது.





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமஷ்டியை தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டதை தொடர்ந்து தெற்கின் பெரும்பாலான கட்சிகளும் அனைத்து இனவாதக் கட்சிகளும் சமஷ்டியை எதிர்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முதல் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா வரை சமஸ்டியை எதிர்கின்றனர். சமஷ்டி தீர்வு வழங்கப்படாது என இலங்கை அரசு திட்டவட்டமாக அறிவிப்பதாக கூறுகிறது. பிரதான சிங்கள கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் எதிர்க்கிறது.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் எதிர்க்கிறது. மக்கள் விடுதலை முன்னணியும் எதிர்க்கிறது. தமிழ் கட்சி ஒன்று முன்வைக்கும் தீர்வை எதிர்ப்பத்தில் அனைவரும் ஒன்றிணைகின்றனர். பௌத்த சிங்களப்பேரினவாதத்தை பேணும அரசியல் அமைப்பான ஒற்றையாட்சியின் மூலம் தொடர்ந்தும் தமிழரை ஒடுக்க முனையும் விடயத்தில் பேரினவாதிகள் அனைவரும் ஓர் அணியில் நிற்கின்றனர்.

"சமஷ்டியை பிரிவினை என்பவர்கள் முட்டாள்கள்" என்கிறார் மனித உரிமை செயற்பாட்டாளர் பாக்கியசோதி சரவணமுத்து.

"வடக்கு- கிழக்கு இணைந்த சுயாட்சி பிரிவினையல்ல என்றும் அது நிலையான நியாயமான நிரந்தரமான தீர்வு என்றும் அதுவே உறுதியான நிரந்தரமான கொள்கை" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியிருக்கிறார்.

தீர்வு என்ற பெயரால் தமிழ் மக்களுக்கு எதைக் கொடுத்தாலும் எதிர்க்கின்ற சிங்களப் பேரினவாதிகளே இலங்கைத் தீவின் இனச் சிக்கலுக்கும் பேரழிவுக்கும் காரணமானவர்கள். சமஷ்டியை பிரிவினை என்பவர்கள் தமிழர் பிரச்சினைக்கு எந்த தீர்வை முன்வைத்தாலும் அதனை பிரிவினை என்பவர்களே. உண்மையில் அவர்கள் முட்டாள்கஎல்ல. மோசமான ஒடுக்குமுறை மனப்பாங்கு கொண்ட பேரினவாதிகள். (தொடரும்)

தீபச்செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் கடும் புயல் 20 பேர் உயிரிழப்பு!

## 100 பேரைக் காணவில்லை



தெற்கு சீனாவின் பியூஜியான் மாகாணத்தை நேற்று சூறையாடிய சவுடலர் புயலுக்கு 20 பேர் பலியாகியுள்ளனர். புயலின் எதிரொலியாக பெய்த தொடர்மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கிய 100ற்கு மேற்பட்டோர் நீரில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இந்த மழையினால் செஜியாங் மாகாணத்தில் உள்ள பிங்யாங் பகுதியில் கடுமையான நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 9 பேர் பலியாகினர்.

ஒருவர் காணாமல் போனதாக கூறப்படுகிறது. பியூஜியான் மாகாணத்தில் நேற்று காலை சுமார் 180 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய சவுடலர் புயலின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் 36 வீடுகள் தரைமட்டமாகின. சுமார் 300 வீடுகள் சேதமடைந்தன. ஆயிரக் கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்து, விழுந்தன.

பியூஜியான் தலைநகரான புழோ நகரில் உள்ள வீதிகளில் 30 அங்குலம் உயரத்துக்கு வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. மாகாணம் முழுவதும் சுமார் 15 இலட்சம் வீடு களுக்கு செல்லும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள மூன்று சர்வதேச விமான நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. 530 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. வெள்ளத்தில் சிக்கித் தவிப்பவர்களை மீட்கும் பணியில் பேரிடர் நிவாரணம் மற்றும் மீட்புப் படையைச் சேர்ந்த வீரர்களுடன் சுமார் 7 ஆயிரம் இராணுவ வீரர்களும் ஈடுபட்டு வருகின்றனர். வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாக கூறப்படும் நூற்றுக்கும் அதிகமானவர்களை அவர்கள் தேடி வருகின்றனர்.

புயல் தாக்குவதற்கு முன்னதாகவே தாழ்வான பகுதிகளில் வசித்துவந்த சுமார் 3 இலட்சத்து 70 ஆயிரம் மக்கள் 32 ஆயிரம் படகுகள் மூலம் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப் பட்டதாக மாகாண அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நேற்றுக் காலை 11 மணி நிலவரப்படி சவுடலர் புயல் பாதிப்புக்கு குறைந்தபட்சம் இருபது பேர் பலியானதாகவும், நூற்றுக்கும் அதிமானவர்கள் மாயமானதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (3-7)



## ஆப்கான் குண்டுத் தாக்குதலில் பலியானோர் 50 ஆக உயர்வு




ஆப்கானிஸ்தானில் நடத்தப்பட்ட இரட்டைத் தற்கொலை தாக்குதல் சம்பவங்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்துள்ளது. ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் கிழக்கில் ஷா ஷாஹீத் என்ற பகுதி அமைந்துள்ளது. பொதுமக்கள் அதிகம் கூடும் இப்பகுதியில்கடந்த வெள்ளிக்கிழமை வெடிபொருள் நிரப்பப்பட்ட லொறியை தீவிரவாதிகள் வெடிக்கச் செய்தனர்.

இந்த தாக்குதல் நடந்த 24 மணி நேரத்திற்குள், காபூல் நகரின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் அக்கடமிக்குள் பொலிஸ் உடை அணிந்த தீவிரவாதி நுழைந்து தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தான்.

அடுத்தடுத்து நடந்த இந்த கொடூர தாக்குதல்களில் பலியானோர்களின் எண்ணிக்கை தற்போது 50 ஆக உயர்ந்துள்ளது. நூற்றுக் கணக்கானோர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அண்மையில் தலிபான் தலைவர் முல்லா ஓமர் கொல்லப்பட்டதாக ஆப்கானிஸ்தான் உளவுத் துறை தெரிவித்த நிலையில், இந்த தாக்குதல் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (3-7)

## அமெரிக்காவுக்கு நீர்மூழ்கியில் போதைப்பொருள் கடத்தல்



மெக்சிகோவில் இருந்து அமெரிக்காவுக்கு 'கோகைன்' என்ற போதைப்பொருள் பெருமளவில் கடத்தப்படுகிறது. எனவே, அதை தடுக்கும் முயற்சியில் அமெரிக்கா தீவிரமாக உள்ளது.

இதனால் தரைப்பகுதி, கடல் மார்க்கம் மற்றும் ஆகாய மார்க்கத்தில் தீவிர கண்காணிப்பில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில் மெக்சிகோவில் இருந்து கடல் வழியாக போதை பொருள் கடத்தப் படுவதாக தகவல் கிடைத்ததையடுத்து,

அமெரிக்க கடலோர பாதுகாப்பு படையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சாதாரண முறையில் உருவாக்கப்பட்ட நீர்மூழ்கி கப்பல் ஒன்று சந்தேகப்படும் நிலையில் நடமாடியுள்ளது.

எனவே, கடலோர காவற்படையினர் அந்த நீர்மூழ்கி கப்பலை மடக்கி சோதனை செய்தனர். அதில் 5,400 கிலோ எடையுள்ள கோகைன் போதைப்பொருள் கடத்தி வரப்பட்டமை தெரியவந்தது.

அதன்மதிப்பு 1170 கோடி ரூபாய் என கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றை கடலோர பாதுகாப்பு படையினர் பறிமுதல் செய்துள்ளனர். (3-7)

## அணுகுண்டு பேரழிவின் நினைவில் இலட்சக்கணக்கானோர் அஞ்சலி

### ஜப்பானில் நேற்று அனுஷ்டிப்பு

ஜப்பானின் நாகசாகி நகரின் மீது அணுகுண்டு வீசப்பட்ட எழுபதாவது நினைவு தினத்தையொட்டி அந்த கொடூர பேரழிவில் உயிர்நீத்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நேற்று காலை ஜப்பானிய மக்கள் மௌன அஞ்சலி செலுத்தி, மரியாதை செய்தனர்.

இரண்டாம் உலகப் போரின் போது, உலகின் முதல் அணுகுண்டாக கருதப்படும் லிட்டில் பாய் குண்டை ஜப்பானில் உள்ள ஹிரோஷிமா நகரின் மீது அமெரிக்கா 6-8-1945 அன்று வீசியது. இரும்பைக் கூட உருக வைக்கும் 4000 டிகிரி செல்சியஸ் வெப்பத்தில் குண்டு வீசப்பட்ட இடத்தின் அருகிலிருந்த அத்தனையும் பஸ்பமாகின. சுமார் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் மக்கள் இதில் கொல்லப்பட்டனர். இதற்கு அடுத்த அணுகுண்டு, ஜப்பானின் துறைமுக நகரமான நாகசாகியில் 9-8-1945 அன்று வீசப்பட்டு, எழுபதாயிரம் பேரை பலி வாங்கியது. இந்த தாக்குதல்களைத் தொடர்ந்து 15-8-1945 அன்று ஜப்பான் சரணடைந்தது.

நாகசாகியில் இந்த பேரழிவு நிகழ்த்தப்பட்ட எழுபதாவது நினைவு தினத்தையொட்டி ஜப்பானின் தெற்கு நகரமான நாகசாகியில் நேற்று இலட்சக்கணக்கான ஜப்பானிய மக்கள் மௌன அஞ்சலி செலுத்தி, எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் இதேநாளில் அணுகுண்டு வீச்சுக்கு பலியான பல்லாயிரக்கணக்கான மக்களை கண்ணீர் மல்க நினைவு கூர்ந்தனர்.


நாகசாகி நகரில் உள்ள அமைதிப் பூங்காவில் (உள்ளூர் நேரப்படி) சரியாக காலை 11.02 மணியளவில் (70 ஆண்டுகளுக்கு இங்கு அணுகுண்டு வீசப்பட்ட அதே நேரம்) தொடங்கிய இந்த மௌன அஞ்சலி நிகழ்ச்சியில், அந்த குண்டு வீச்சில் சிக்கி படுகாயங்களுடன் உயிர்தப்பியவர்கள் மற்றும் உலகின் சுமார் 75 நாடுகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (3-7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி பலி!

மோட்டார் சைக்கிள் விபத்தில் தலையில் பலத்த காயம் அடைந்து முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். இதில் முல்லைத்தீவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ந.ஜெயக்குமார் (வயது-50) என்ற குடும்பஸ்தரே பரிதாபமாக உயிரிழந்தவர் ஆவார். இது தொடர்பாக தெரிய வருவதாவது, கடந்த 5 ஆம் திகதி பிரஸ்தாப நபர் மாங்குளம் பிரதான வீதியூடாக பயணித்த வேளை எதிரே வந்த வாகனத்தடன் நேருக்கு நேர் மோதுண்டு வீதியில் வீழ்ந்துள்ளார். அதே நேரம் அவ்வீதி வழியாக பயணித்தகூலர் ரக வாகனமும் பிரஸ்தாப நபரை மோதித் தள்ளியது. இதனையடுத்து அவர் தலையில் பலத்த காயம் அடைந்ததுடன் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட நிலையில் அங்கு கூடி நின்ற பொதுமக்களின் உதவியுடன் முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மாஞ்சோலை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு. அங்கிருந்து நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார். இவரது மரண விசாரணைகளை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசா ரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (2-3-302)



# ஐ.நாவின் மனித உரிமைகள் அறிக்கை 20 ம் திகதி ஜனாதிபதியிடம் கையளிப்பு

(கொழும்பு)

**யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல் சம்பவம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை இம்மாதம் 20 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.**



இந்த அறிக்கை இரகசிய ஆவணமாக தயாரிக்கப்பட்டு ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அறிக்கை கிடைத்த பின்னர் அது தொடர்பாக சர்வதேசம் ஏற்றுக்கொள்ளும் தரத்துக்கு ஏற்றாற்போல் தேசிய பொறிமுறையொன்றின் மூலம் விசாரணைகளை முன்னெடுக்க அரசாங்கம் உள்ளக விசாரணையொன்றை மேற்கொள்ளும் என்றும் மேலும் தெரியவருகின்றது. (இ-7)

# உண்மையான நல்லாட்சியால் மோதல் நிலைமை தவிர்ப்பு

## நவீன் திஸாநாயக்க பெருமிதம்

உண்மையான நல்லாட்சி காரணமாகவே வேட்பாளர்களிடம் கடந்த காலங்களில் காணப்பட்ட மோதலான நிலைமை தற்போது இல்லை என அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியல் களம் தற்போது சூடு பிடித்திருந்தாலும் உண்மையான நல்லாட்சியால், இந்த மோதல் நிலைமை ஏற்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

காமினி திஸாநாயக்க மன்றத்தினால், ஹற்றன் - டிக்கோயா நகர சபை மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நவீன் திஸாநாயக்க இதனை தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தின் ஊடாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு ஒன்றை வழங்க நடவடிக்கை எடுப்பேன்.

தேர்தல் நேரத்தில் தற்போது ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் ஒரே சட்டம் அமுல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் வன்முறையான நிலைமையை நிறுத்த முடிந்துள்ளது.

எந்த ஒரு அரசியல்வாதியும் 12 ஆண்டுகளுக்கு மேல் பதவிகளில் இருந்தால், மக்களுக்கு வெறுத்து விடும். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இவ்வாறான நிலைமையே ஏற்பட்டது எனவும் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த கூட்டம் நடைபெற்ற போது ஹற்றன் - டிக்கோயா நகர சபை மண்டபத்திற்குள் சென்ற தேர்தல் அதிகாரிகள் கூட்டம் தேர்தல் சட்டத்திற்கு முரணானது எனவும் அமைச்சர் நவீன் திஸாநாயக்க இந்த கூட்டத்தில் இருந்து வெளியேற வேண்டும் எனவும் கூறியிருந்தனர்.

எனினும் இது அரசியல் கூட்டம் அல்ல என தெரிவித்துள்ள அமைச்சர், காமினி திஸாநாயக்க மன்றத்தின் தலைவர் என்ற முறையில் தான் தேர்தலுக்கு முன்னர் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்ததாக தெரிவித்தார். (இ-7)

# இன, மத பேதங்களையும் மக்களையும் வேறுபடுத்துவோருக்கு வாக்களிக்காதீர்

## சரத் பொன்சேகா அட்வைஸ்

(கொழும்பு)

நாட்டில் வாழ்கின்ற மக்களின் இன, மத பேதங்களையும் மக்களையும் வேறுபடுத்தி பார்க்கின்ற கட்சிகளுக்கு நீங்கள் வாக்களிக்க வேண்டாம். அவர்களை உங்களோடு இணைத்துக் கொள்ளவும் வேண்டாமென ஜனநாயக கட்சியின் தலைவர் சரத்பொன்சேகா தெரிவிததார்.

ஜனநாயகக் கட்சியின் தேர்தல் பிரசார கூட்டம் மட்டக்களப்பு கிரான் ரெஜி மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், வடகிழக்கிலே ஊழல் மிக்க ஆட்சியை நடத்திய மகிந்த ராஜபக்ஷவை மக்கள் தோற்கடித்தார்கள். எதிர்காலத்திலே வடகிழக்கிலே இன, மத பேதங்களை பிளவுபடுத்தி வேறுபடுத்தி



பார்ப்பார்கள் ஆனால் அவர்களையும் நாங்கள் நிச்சயம்தோற்கடிக்க வேண்டும்.

எனவே இந்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மக்களும் சிறந்த முறையில் வாழ்வதற்கான வழி முறைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமெனவும் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நாட்டில் அழிவை ஏற்படுத்த மகிந்த ராஜபக்ஷ முயற்சி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டில் அழிவை ஏற்படுத்தவே முயற்சிக்கின்றார் என ஜனநாயகக் கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஒரே நாடாக இலங்கையை கட்டியெழுப்புவதே ஜனநாயகக் கட்சியின் நோக்கமாகும்.

பத்து அம்ச திட்டத்தின் அடிப்படையில் இம்முறை தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிறுபான்மை இன சமூகத்தைச் சேர்ந்த ரகர் வீரர் தாஜுடீன் மரணம் பற்றிய முக்கிய உண்மைகள் அம்பலமாகியுள்ளன.

குற்றச் செயலில் ஈடுபட்டவர்கள் தராதரம் பாராது தண்டிக்கப்பட வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ சிங்கள மக்களிடம் ஒன்றையும், தமிழ் மக்களிடம் ஒன்றையும், முஸ்லிம் மக்களிடம் வேறு ஒன்றையும் கூறி பிரசாரம் செய்து வருகின்றார்.

இந்த ஏமாற்று வேலைகளுக்கு கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதியே முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

தொடர்ந்தும் மகிந்தவினால் மக்களை ஏமாற்ற முடியாது என சரத் பொன்சேகா பிரசாரக் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையில்லாப்பட்டதாரிகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்

## பிரபாகரன் எடுத்துரைப்பு



வேலையில்லாப் பட்டதாரிகள் தொடர்பாக கவனம் செலுத்துங்கள் எனவும் இரவு, பகல் என்று பாராமல் படித்து பட்டம் பெற்றுவிட்டு இன்று அரசியல்வாதிகளின் பின்னால் திரிகின்றார்கள். இவர்கள் தேர்தலின் பின்னராவது கவனிக்கப்படுவார்களா? என ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் யாழ். மாவட்டத்தில் இலக்கம் 7 இல் போட்டியிடுகின்ற வன்னியசிங்கம் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

பட்டதாரிகள் மட்டுமல்லாது படித்துவிட்டு வேலை வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலை பெற்றுக் கொடுப்பதில் உறுதியாக இருக்கின்ற வன்னியசிங்கம் பிரபாகரன் மேலும் தெரிவிக்கும் போது, இன்றைய இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுத்தருவதாக கூறிக்கொண்ட அரசியல் வாதிகள் அவ் இளைஞர், யுவதிகளை தமது வேலைகளுக்காக எப்படி எல்லாம் பயன்படுத்துகின்றார்கள்.அரசியல் வாதிகள் மீது நம்பிக்கை கொண்டு வேலை வாய்ப்பினை பெற்றுத் தாருங்கள் என்று கேட்கின்ற இளைஞர், யுவதிகளை ஒவ்வொரு அரசியல் வாதிகளும்தலைநிமிர்ந்துபார்க்கவேண்டும்.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி அடைந்தால் எனது இருப்பிடம் அளவெட்டிக்கிராமமே அது மட்டுமல்லாது எனது பிள்ளைகள் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் தான் படிப்பார்கள்.

எனக்கு 44 வயது வரை இந்த அரசியலில் ஈடுபடும் எண்ணம் துளிகூட இருக்கவில்லை.

என்னையும் எனது மக்களையும் இதுவரை இருந்த அரசியல் வாதிகள் ஏமாற்றிய விதம் இடம் பெயர்ந்த மக்களை முகாமில் வைத்துக் கொண்டு ஆண்டாண்டு காலமாக அவர்களைப் பற்றிப் பேசிப் பேசி தேர்தலில் வெற்றி பெற்று பின் அவர்களைக் காணக்கிடைப்பதில்லை.

அவர்களின் கஷ்டங்களினைப் போக்கக் கூட வருவதில்லை. அவர்களை இம்முறையாவது மக்கள் இனங்காண்பார்களா?

எமது விடிவிற்காய் தமது வாழ்க்கையினை அற்பணித்தவர்கள் இன்று புனர்வாழ்வில் உள்ளார்கள். அவர்களின் வழக்கினை எடுத்து நடத்துவதற்கு எவரும் உதவத் தயாரில்லை. அவர்கள் எமக்காக தமது இளமையினையும் உடற்சதையினையும் மண்ணில் விட்டு இன்று சிறைவாசத்தை அனுபவிக்கிறார்கள். இதனை தேர்தலுக்கு முன்னர் யாராவது பேசினார்களா? இன்று பேசுகிறார்கள் ஆனால் தேர்தலின் பின் பேசுவார்களா? என்பது சந்தேகமே என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# எமது வெற்றி மீள்குடியேற்றத்திற்கு சாதகமான நிலையை ஏற்படுத்தும்

## காதர் மஸ்தான் தெரிவிப்பு



எமது மக்களின் மீள்குடியேற்றம் அதிகாரத்தில் இருந்தவர்களால் சீராக மேற்கொள்ளப்படாமையினாலேயே இன்னும் நாம் மீள்குடியேற்றம் தொடர்பாக பேசிக் கொண்டிருக்க வேண்டியுள்ளது. எமது வெற்றியின் பின்னர் மீள்குடியேற்றம் முழுமை பெறும் என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைபபின் வன்னி தேர்தல் தொகுதியில் 3ஆம் இலக்கத்தில் போட்டியிடும் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

வர்த்தகராக இருந்த நான் பல்வேறு விதத்தில் மக்களுக்கு சேவைகளை எனது சொந்தப்பணத்தில் செய்திருக்கின்றேன். அந்நிலையில் அச் சேவையை தொடர்ந்து செய்வதற்கு அரசியல் அங்கீகாரத்தை பெற்று இதை விட மிகச்சிறப்பாக சேவைகளை செய்ய முடியும் என்பதே காரணமாகவுள்ளது.


இதற்கு எமது பிரதேசத்தை சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகத்தினர் கற்றவர்கள் என்னை அரசிலுக்கு வருமாறு அறிவுறுத்தல் வழங்கியிருந்தனர். அவர்களின் ஆலோசனைக்கு அமைய இத்தேர்தலில் உள்ள அரசியல் நிலைப்பாடுகளை பார்க்கும்போது அது சிறப்பாக இருந்ததன் காரணமாகவும் இத்தேர்தலில் நான் போட்டியிட எண்ணினேன்.

நான் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அறிந்தவுடன் எமது பலம் தெரிந்து எமது ஆதரவாளர்கள் தாம் சார்ந்த கட்சிகளின் தலைமைகளுக்கு அறிவித்ததற்கு இணங்க கட்சி பிரமுகர்கள் பலர் எம்மை தொடர்பு கொண்டார்கள்.எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நேர்மையான மக்களுக்கு வலிந்து உதவ வேண்டும் என்ற எண்ணம், நாட்டை முன்னேற்ற எடுக்கும் முயற்சிகளுக்கு நாம் கைகொடுக்க வேண்டும் என்பதற்காகவும் அவரது கட்சியில்போட்டியிட எண்ணினேன்.

அதற்கும் அப்பால் எதிர்வரும் 5 வருடங்களுக்கு அவர்தான் ஜனாதிபதியாக இருக்கப்போகின்றார். இந்த சந்தர்ப்பத்தில் அவருடன் இணைந்து பணியாற்றும் போது மிகவும் பாதிப்படைந்துள்ள எமது பிரதேச மக்களுக்கு சேவையை செய்ய முடியும் இதனை சிலர் தவறாக காட்சிப்படுத்த முயல்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# தமிழினப் படுகொலையை வெளிப்படுத்துவதே இன விடுதலைக்குரிய அத்திபாரமாக அமையும்

## சிவமோகன் தெரிவிப்பு



முள்ளிவாய்க்கால் தமி ழின படுகொலையை வெளி கொண்டுவருவது தமிழின விடுதலைக் குரிய அத்திபா ரம் என வன்னி மாவட் டத்தில் போட்டியிடும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

மன்னார் தேர்தல் அலு வலக திறப்பு விழாவில் கல ந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொட ர்ந்து தெரிவிக்கையில்,

முள்ளிவாய்க்கால் மண் ணில் கொடூர கொலைகள் நடந்தேறிய வரலாறு மறுக் கப்பட முடியாதது. ஆதாரங் கள் பல ஏற்கனவே பதிவாகி விட்டன. மீண்டும் ஆதார ங்களை தேடவேண்டியது சர்வதேசத்திற்கு அவசிய மற்றது.

எனவே இலங்கை அரசு பொறுப புக்கூறுதல் விடயத் தில் அசமந்த போக்கை கடை ப்பிடிக்குமானால் உலக நீதி தமிழினத்தை தனது சுயநிர் ணய உரிமை யுடன் வாழக்கூடிய விதத்தில் சர்வ ஜன வாக கெடுப்புக்கு செல்ல வேண்டி யது தவிர்க்க முடியாதது. வடமாகாணசபை ஏற்கனவே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி விட்டது. எனவே வடமாகாண மக்க ளின் குரல்கள் மழுங்கடிக்கப்பட முடியாதவை. எனவே சிங் கள பேரினவா திகள் கூக்குரல் இட்டு தமி ழர் உரிமை களை மழுங் கடிப்பதை நிறுத்திவிட்டு இன நல்லி ணக்கத்திற்கு ஒத்துழைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தேர்தல் வியூகம்

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனக்கு ஒத்துழைப்பு தரவில்லை

## சாந்தி குற்றச்சாட்டு



யுத்தவலிகளை சுமந்த பெண் என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எனக்கு ஒத்துழைப்பு தரவில்லை என கூட்டமைப்பின் சார்பில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளரான திருமதி சி.சாந்தி தெரிவித்துள்ளார்.

வவுனியாவின் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற் கண் டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,


வன்னி மாவட்டத்தில் ஒரு பெண் வேட்பாளராக யுத்த சுமைகளை சுமந்தவள் என்ற வகையில் கூட்டமைப்பில் நான் போட்டியிடுகின்றேன்.

எனது பிரசார நடவடிக்கைகளுக்கு தமிழரசுக் கட்சி எனக்கு முழு ஒத்துழைப்பு தருகிறது. குறிப்பாக வடமாகாண சுகாதார அமைச்சர் மற்றும் வன்னியில் போட்டியிடும் வேட்பாளர் றோய் ஜெயக்குமார் ஆகியோர் எனக்கு ஒத்துழைப்பு தருகிறார்கள்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவ்வளவாக ஆதரவு தரவில்லை. பெண் வேட்பாளர் போட்டியிடுகின்றார். அவர் யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர். அரச அதிகாரியாக இருந்தவர் என்பதை அவர்கள் வெளிப்படுத்தவில்லை. எனக்கு செல்வாக்கு உள்ள இடத்தில் அவர்கள் கூட்டுச் சேர விரும்புகிறார்கள். ஆனால் ஏனைய இடங்களுக்கு என்னை அழைத்துச் சென்று அறிமுகப்படுத்த கூட்டமைப்பினர் தயாராகவில்லை. எனக்கு ஆதரவு அதிகரிப்பதை அவர்கள் பெரிதாக விரும்பவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# யாழில் போதைப்பொருள் பாவனையினை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## சிவசங்கர் வாக்குறுதி



யாழில் மாணவர்களிடையே அதிகரித்துவரும் போதைப் பொருள் பாவனை மற்றும் சட்டவிரோத மது பாவனைகள் என்பவற்றை இல்லாதொழிப்பதற்காக சட்ட ரீதியாகவும் சமூக ரீதியாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி யின் யாழ். மாவட்ட வேட்பா ளர் வைத்தியர் இ. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நிலையில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற இ.சிவசங்கர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

பொய்யான வாக்குறுதிகளை வழங்கி மக்களின் உணர்வில் அரசியல் நடத்தாது எமது முழுப்பலத்தினையும் ஒன்று சேர்த்து மக்களின் சவால்களை வெற்றி பெறச் செய்வதே எனது நோக்காகும்.

போருக்குப் பின்னர் நலிவடைந்துள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரச மற்றும் அரச சார்பற்ற துறைகளின் உதவியுடன் காத்திரமான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினை சார்பான விடயங்களில் எமது மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோருடன் பல்வேறு தளங்களில் கருத்துக்கள் பெறப்பட்டு அதற்குரிய செயல் வடிவம் கொடுக்கும் பொறிமுறை முழுவீச்சுடன் உருவாக்கப்படும்.

எதிர்காலத்தில் எனது எல்லாச் செயற்பாடுகளிலும் வெளிப்படைத் தன்மையைப் பேணுவதுடன் செயற்பாடுகள் தொடர்பான மக்களின் சகல விதமான கருத்துக்களையும் மதித்து உள்வாங்கி செயற்படுவதுடன் மக்களின் வேண்டுகைகளை உரிய தரப்பினருக்குக் கொண்டு சென்று அதற்கான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படும். இதற்கு ஏதுவாக எந்நேரமும் எம்முடன் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் நிரந்தர அலுவலகங்கள் இம் மண்ணில் அமைக்கப்படும்.

எமது மக்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கியிருக்கும் முக்கியமான விடயங்களில் அதீத அக்கறையுடன் செயற்பட்டு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

தமிழ்மொழிப் பயன்பாட்டை எல்லா மட்டங்களிலும் உறுதிப்படுத்துவதோடு கலை, கலாசாரம், பண்பாடு என்பவற்றை பேணுவதற்காகப் பாடசாலை, வணக்கஸ்தலங்கள் மற்றும் பொது இடங்களில் கட்டாயப்படுத்தப்பட்ட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

விடுவிக்கப்படாத பிரதேசங்களை விரைவாக மீளப்பெறுதலுடன் இடம்பெயர்ந்து நிரந்தர இடங்களை விட்டு வேறு இடங்களில் தங்கியுள்ள மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விரைவான விடுதலை தொடர்பாக நிர்வாக ரீதியான அழுத்தங்களை கொடுப்பதுடன் சட்ட ரீதியான நடைமுறைகளும் முன்னெடுக்கப்படும்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை நிலை நிறுத்துவதற்கான பொருளாதாரத் திட்டங்களை செயற்படுத்துவதுடன் சமூகத்தில் பாதுகாப்புடனும் கௌரவத்துடனும் வாழ்வது உறுதி செய்யப்படும்.

யுத்தத்தினால். மாற்றுத் திறனாளி ஆக்கப்பட்டவர்களின் சமூக மீளிணைவு மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் விசேட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழிவகுக்கப்படும்.

போரினால் பெற்றோரை இழந்த சிறார்களின் கல்வி, பாதுகாப்பு, வாழ்க்கை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கான அறக்கட்டளைகளை ஒருங்கிணைப்பதுடன் சிறுவர் துஷ்பிரயோகமும் இல்லாதொழிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்கொழு கழுகுகள் வி.கழக உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்








நெற்கொழு கழுகுகள் வி.க. நடத்தும் வடமாகாண ரீதியான உதை பந்தாட்டப் போட்டி முடிவுகள்வருமாறு,

மூளாய் வளர்மதி வி.க. எதிர் பாசையூர் சென்.அன்ரனீஸ் வி.க. மோதின. ஆட்டத்தின் 2ஆவது நிமிடத்தில் பாசையூர் சென்.அன்ரனீஸ் வி.க. முதலாவது கோலைப் பெற்றது. இரண்டாவது பாதி ஆட்டத்தில் மிகச் சிறப்பாக ஆடிய பாசையூர் சென். அன்ரனீஸ் வி.க. 4 கோல்களைப் பெற பாசையூர் சென்.அன்ரனீஸ் வி.க. அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இந்தப் போட்டியில் கலிஸ்ரர் 2 கோல்களையும் கிரோசாந், ரஜித், மதுசன் ஆகியோர் தலா ஒரு கோலையும் பெற்றுக்கொண்டனர். சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தியதுடன் 2 கோல்களையும் அடித்த கலிஸ்ரர் ஆட்டநாயகன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டார். இவருக்கான பதக்கத்தினை கழுகுகள் விளையாட்டுக் கழகத்தின் மூத்த உறுப்பினரும் கழக நலன் விரும்பியுமான தே.குகதாசன் வழங்க கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் அ.சந்திரசேகரம் அணிக்கான பணத் தொகையை வழங்கி கௌரவித்தார்.

07.08.2015 அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் ஞானகலா வி.க எதிர் உடுப்பிட்டி யூத் வி.க. விளையாடின. போட்டியின் இரு பாதி நேர ஆட்டத்திலும் இரு அணிகளும் பல முயற்சிகள் மேற்கொண்ட போதும் இரு அணிகளாலும் கோல் எதுவும் பெறப்படவில்லை.

இதனால் சமநிலை தவிர்ப்பிற்காக தலா 5 உதைகள் வழங்கப்பட்டன. இதில் சிறப்பாக செயற்பட்ட உடுப்பிட்டி யூத் வி.க. 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. போட்டியின் போது சிறப்பாக விளையாடிய உ.சஞ்ஜீவன் போட்டியின் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பதக்கத்தையும் அணிக்கான பரிசுத் தொகையையும் கழுகுகள் வி.க மூத்த உறுப்பினரான ஆர்.அரசரட்ணம் வழங்கினார்.

07.08.2015 அன்று நடைபெற்ற இரண்டாவது உதைபந்தாட்ட சமரில் வடமராட்சியின் பலம்வாய்ந்த அணியான கலைமதி வி.க எதிர்த்து ஊரெழு றோயல் வி.க. மோதியது.

முதல் பாதி நேர ஆட்டம் மிக விறுவிறுப்பாக அமைந்தாலும் இரு அணிகளாலும் கோல் எதனையும் செலுத்த முடியவில்லை. இரண்டாவது பாதி ஆட்டத்தில் தமது வியூகத்தினை மாற்றி விளையாடிய கலைமதி வி.க. 14 ஆவது நிமிடத்தில் விஜயதாஸ் அபியின் கால்கள் மூலம் கோலினை உட்செலுத்தி ரசிகர்களை ஆரவாரப்படுத்தினர். தொடர்ந்து வரும் நேரங்களில் றோயலின் முயற்சிகளை இலாபகமாக முறியடித்ததன் மூலம் கலைமதி வி.க. 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தியதுடன் ஒரு கோலையும் அடித்த விஜயதாஸ் அபி ஆட்டநாயகன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டார். இவருக்கான பதக்கத்தை கழுகுகள் விளையாட்டுக் கழகத்தின் மூத்த உறுப்பினரும் கழக நலன்விரும்பியுமான ஆர்.அரசரட்ணம் வழங்கினார். (க)

## இன்றைய போட்டிகள்

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதை பந்தாட்டப்போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியில் மத்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலைமதி விளையாட்டுக்கழகமும் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது போட்டியில் செந்தமிழ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென் பிலிப்பு நேரிஸ் விளையாட்டுக்கழகமும் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள மூன்றாவது போட்டியில் சென்.மேரிஸ் பி அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் அணியும் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள நான்காவது போட்டியில் வல்வை அணியை எதிர்த்து விண்மீன் அணியும் மோதவுள்ளன. (க)

## ஜே.பி.எல்.வெற்றிக்கிண்ணம் கே.சீ.சீ.சீ.அணி 2-வது வெற்றி

யாழ்.பிறீமியர் லீக் வெற்றிக்கிண்ணத்திற்காக யு.ஆர். பவுண்டேசன் 3ஆவது ஆண்டாக நடத்திவரும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 2ஆவது சுற்றில் கே.சீ.சீ.சீ. அணி திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியை 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று தமது 2ஆவது வெற்றியை பதிவு செய்துள்ளது.



முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி 16.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. அசோக்-27, சுரேஸன்-47 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் பிரதீபன், ஜெயரூபன் தலா ஒரு இலக்கினையும் பிரியதாஸ் 3 இலக்கினையும் பபிதரன் 3 இலக்கினையும் சாம்பவன் ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.சீ.சீ.சீ அணி 16.1 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. சத்தியன்-48, ஜெயரூபன்-23, உமாநாத்-14, ஆதித்தன்-14 ஓட்டங்களைப்பெற்றனர். ஜீவியதாஸ், சுரேந்திரன் தலா ஒரு இலக்கினையும் விதுன் ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் கே.சீ.சீ.சீ அணியைச் சார்ந்த சத்தியன் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார். இப் போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வுக்கு கே.சீ.சீ.சீ.அணி 4.69 புள்ளிகளையும் திருநெல்வேலிசீசீஅணி1.44புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையான சொற்கள், கசப்பான சொற்கள் பலவீனமான கொள்கையின் அறிகுறி.
– விக்டர் ஹியூகோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழர்களுக்கு எதிரான குறிவைப்பில் மகிந்தனார்

ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் வடக்குக்குச் செல்ல விசா தேவைப்படும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் பிரதமரானால் இலங்கையில் இருந்து வடக்குப் பிரிந்து விடும் என்பது மகிந்த ராஜபக்ஷவின் கருத்து.

இதில் இருந்து இனவாதத்தைத் தூண்டும் அளவில் மகிந்த ராஜபக்ஷ தேர்தல் பிரசாரம் செய்வது தெரிகிறது. பிரிவினைவாதம் பற்றிக் கதைப்பது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும்போது, பிரிவினை வாதத்தைத் தூண்டுவதாக அல்லது இனவாதத்தை மக்களிடையே ஏற்படுத்துவதான நடவடிக்கைகளும் தண்டனைக்குரிய குற்றமாகிறது. இருந்தும் இந்தக் குற்றங்களை தமிழ் மக்கள் இழைக்கக் கூடாதேயன்றி, தென்பகுதி அரசியல்வாதிகள் இழைப்பது தண்டனைக்குரிய குற்றமாகாது என்பதுதான் இலங்கையின் நடைமுறை.

இது ஒரு புறம் இருக்க, ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் வடக்குக்குச் செல்ல விசா தேவைப்படும் என்ற மகிந்த ராஜபக்ஷவின் முன்வைப்பு தமிழர்கள் இன்னமும் தனிநாட்டுக் கோரிக்கையுடன் உள்ளனர் என்றவாறான சிந்தனையை தென்பகுதியில் ஏற்படுத்துவதாகும்.

தமக்கான உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில், விடுதலைப் போராட்டத்தை தமிழ் இளைஞர்கள் நடத்தியது உண்மை. எனினும் அந்தப் போராட்டம் மிக மோசமான வன்கொடுமை செய்யப்பட்டு மகிந்தவின் ஆட்சியில் முடிவுறுத்தப்பட்டது.

ஓர் இன அழிப்பு என்று விபரிக்கக்கூடிய அளவில் தமிழ் மக்களுக்குப் பேரழிவை ஏற்படுத்தி, அவர்களைச் சின்னாபின்னப்படுத்தி, வாழ்ந்த ஊரில்லை, இருந்த வீடில்லை என்ற கையறு நிலைக்குக் கொண்டு வந்துவிட்டு,

இப்போது மீளவும் இனவாதத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கொட்டுவது எந்த வகையில் நியாயமாகும்?

யுத்தம் முடிந்த பின்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று கூறிய மகிந்த ராஜபக்ஷ, போர் முடிந்து ஐந்து ஆண்டுகள் கடந்த நிலையிலும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் எந்த முயற்சியையும் மேற்கொண்டிலர்.

தமிழர்கள் இந்த நாட்டின் அநாதைகள். அவர்களுக்கு எதுவும் கொடுக்கக்கூடாது என்ற ஒரு வக்கிரமான நிலைப்பாட்டை கொண்டிருந்த மகிந்த ராஜபக்ஷ மீளவும் ஆட்சியில் வருவதற்காக தமிழர்களைக் குற்றவாளிகளாக்க முயற்சிப்பதை இந்த நாட்டு மக்கள் அனுமதிக்கக் கூடாது.

இதற்கு மேலாக, ரணிலின் அரசாங்கத்தில் வடக்குக்குச் செல்ல விசா வேண்டும் என்று கூறுகின்ற மகிந்தனார், தனது ஆட்சியில் வடபகுதித் தமிழ் மக்கள் தெற்குக்குச் செல்ல பயண அனுமதி பெற வேண்டும் என்ற கட்டுப்பாட்டை கொண்டு வந்தவர்.

தெற்குக்குச் செல்வதற்கான பயண அனுமதியை பத்திரிகைகளில் பார்க்கவேண்டிய நிலைமையிலேயே வடக்கின் நிர்வாகம் நடத்தப்பட்டது. சிங்கள மக்கள் வடக்குக்குச் செல்ல விசா வேண்டும் என்று கவலை கொள்ளும் மகிந்தனாருக்கு வடபகுதி மக்கள் தெற்குக்குச் செல்லபயண அனுமதி எடுத்த போது எந்தத் தாக்கமும் கவலையும் ஏற்படவில்லை.

ஆக, சிங்களவர்களுடைய நாடு இலங்கை என்ற அடிப்படையிலேயே இப்போதும் மகிந்த ராஜபக்ஷ தெற்கில் பிரசாரம் செய்கிறார் எனில், என்றுதான் இலங்கைத் திருநாட்டிற்கு விடிவு கிடைக்குமோ என்பது தெரியாததே.

# பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுமாறு புலம்பெயர்ந்தோரிடம் வேண்டுகோள்

## வடக்கு மாகாண சபை விடுத்தது

போரினால் பாதிக்கப்பட்ட எம் இனத்துக்கு உதவி செய்வதற்கு புலம்பெயர் உறவுகள் முன்வர வேண்டும் என வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த யுத்தத்தினால் எம் இனம் பாதிக்கப்பட்டு மிகவும் நலிவுற்ற நிலையில் இருப்பதை தாங்கள் அனைவரும் அறிந்ததே. எம் இனத்தை பாதுகாப்பதற்காக சென்றவர்கள் எம் எதிர்கால சந்ததி சுதந்திரமாக வாழ வேண்டும் என்று பல தியாகங்களை செய்தவர்கள் இன்று நடுத் தெருவில் ஒருவேளை உணவுக்கு அடுத்தவரிடம் கையேந்தும் துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர். இவர்களை பாதுகாத்து இவர்களின் வாழ்வாதாரத்தை கட்டிஎழுப்ப வேண்டிய பொறுப்பு எமக்கிருக்கின்றது.

அந்த வகையில் 2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதி எனது வரவு செலவு திட்ட வாசிப்பில் அவர்களுக்கான வேலைத்திட்டத்தினை எனது கொள்கை பிரகடனமாக கொண்டு அதனடிப்படையில் ஏறக்குறைய 43 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளேன். அதன் பின் தொடர் நடவடிக்கையாக மூன்று வகையான விண்ணப்பபடிவம் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளது. யூன்மாத இறுதிவரை 12676 குடும்பங்களின் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதில் முதல் கட்டமாக தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களான 324 குடும்பங்கள் பதிவு செய்துள்ளனர். அதனடிப்படையில் விண்ணப்பம் கிடைக்கப்பட்ட பெற்ற குடும்பங்களை சந்தித்து அவர்களினால் என்ன தொழில் முயற்சிகளை மேற்கொண்டால் வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும் என்ற விடயத்தை அறிந்து அவர்களுக்கு என தலா 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான திட்டமொன்று அமுல்படுத்த இருக்கும் போது வெளிமாகாண கைதிகளும் இவ்வாறான ஒரு சூழ் நிலையில் இருப்பதை அறிந்து அவர்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்த எண்ணி அவர்களுடனும் தொடர்பை ஏற்படுத்தி அவர்களின் விண்ணப்பங்களும் பெறப்பட்டு வருகின்றது. அந்த வகையில் மட்டக்களப்பு, திருகோணமலை, கண்டி, புத்தளம், கொழும்பு, பதுளை போன்ற மாவட்டங்களை சேர்ந்த விண்ணப்பதாரிகளும் விண்ணப்பித்துள்ளனர் இவர்களுக்கான வேலைத்திட்டமும் உடனடியாக ஆரம்பமாகவுள்ளது.

எனவே புலம் பெயர் உறவுகளே! ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கும் இன்னும் பதிவு செய்கின்ற குடும்பங்களுக்கும் உதவ வேண்டிய பாரிய பொறுப்பு எமக்குள்ளது. கடந்த காலங்களில் நீங்கள் ஆற்றிய சேவை அளப்பரியது. இருப்பினும் கடந்த காலங்களில் உங்களினால் மக்களுக்கு வழங்கப்பட்ட நிதி முற்று முழுதாக உரிய மக்களுக்கு சென்றடைந்ததா? என்பது கேள்விக்குறி. அத்தோடு அவ்வாறு நிதியை பெற்றவர்கள் தமது நிர்வாக செலவுக்கே அதிகளவு நிதியை பயன் படுத்தி உள்ளனர் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். ஆகவே இந்நிலை மாற வேண்டும். நீங்கள் கடும் வெயிலிலும் கடும் குளிரிலும் உழைத்த பணத்தில் ஒரு ரூபாவேனும் வீண்விரயம் செய்வதை நான் விரும்பவில்லை. தற்பொழுது என்னிடம் உரிய தரவுகளும் வாழ்வாதார ஊக்குவிப்பு திட்டங்களும் இருக்கின்றன. என்ன வகையான வேலைத்திட்டத்துக்கு எவ்வளவு நிதி தேவை என்பதை என்னால் மதிப்பீடு செய்ய முடியும். ஒவ்வொரு பயனாளிக்குமான மதிப்பீட்டோடு அவர்களின் கணக்கு விபரங்களை நிலையான கட்டளை விபரத்தோடு தங்களுக்கு அனுப்பி வைக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## த.வி.கூட்டணியின் பிரசாரக் கூட்டம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று மாலை 6 மணிக்கு அரியாலை காந்தி சனசமூக நிலையத்தில் நடைபெறும். கட்சியின் முதன்மை வேட்பாளர் ஓய்வுபெற்ற நீதி பதி இ.த.விக்னராஜா தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் அக்கட்சி வேட்பாளர்கள் உரையாற்றவுள்ளனர். (ந-12)

# மோ.சைக்கிள் விபத்து இரு இளைஞர்கள் காயம்

(கரணவாய்)

வேகக்கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் முன்னால் சென்று கொண்டிருந்த முச்சக்கரவண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.45 மணி யளவில் நெல்லியடி நாவலர் மடத்தடியில் இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவத்தில் அல்வாய் தெற்கைச் சேர்ந்த இரத்தினசிங்கம் திவாகரன் (வயது-23), முத்துக்குமார்தர்சன் (வயது-23) ஆகியோரே படுகாயமடைந்துள்ளனர். (எ-5,60)

## திருவள்ளுவர் சிலை இன்று திறப்பு விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் புதிதாக அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலை திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நகராட்சி மன்றச் செயலாளர் க. சண்முகதாஸன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வி.இராஜரத்தினம் மேற்படி சிலையை திறந்து வைக்கவுள்ளார். (இ-5-29)

## சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வயிற்றோட்டம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒன்றரை வயதுக்குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

வேலணை மேற்கு வேலணையைச் சேர்ந்த விஜயதாஸ் விஜித் என்ற குழந்தையே நேற்று முன்தினம் இறந்துள்ளது.

வயிற்றோட்டம் காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை இரவு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட குழந்தை மறுநாள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

உடலில் நீர்த்தன்மை குறைந்ததனால் இந்த மரணம் சம்பவித்திருப்பதாக மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் குழந்தையின் மரணம் தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். (இ-3)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் குருதித் தட்டுப்பாடு ஏற்பட்டதையடுத்து கந்தர்மடம் சிவகுருநாதர் குருபீடம் வேதாந்த மடத்தில இன்று காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை இரத்தான நிகழ்வு இடம்பெறவுள்ளது.

ஆர்வமுள்ள குருதிக் கொடையாளிகளை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (எ-8,12)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## தாத்தாவும் பேரனும்



தத்துவங்களைப் புரிந்து கொண்டால் நம் வாழ்க்கையில் நடைபெறக் கூடிய எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அர்த்தம் புரிந்து விடும். இறைநிலையைத் தாத்தா என்றால், அதிலிருந்து முதலில் தோன்றிய விண் மகன். முதல் விண்ணிலிருந்து இரண்டாவதாகத் தோன்றிய நிழல்-விண்ணோ இறைவெளிக்குப் பேரன்.

பேரன் எங்கே போனாலும் தாத்தாவுடன் சேர்ந்து கொண்டான். நிழல் விண் இறைவெளியோடு கலந்துவிட்டது தான் காந்தம். அப்படியானால் தாத்தாவும், பேரனும் அதாவது இறைவெளியும், நிழல் விண்ணும் ஆடும் கூத்துத் தான் பிரபஞ்சம்.

இறைவெளியில் நிழல் விண்கரைந்த நிலை காந்தம். காந்தம் தான் அழுத்தமாக, ஒலியாக, ஒளியாக, சுவையாக, மணமாக, மனமாகப் பிரபஞ்சம் முழுவதிலும் எல்லாப் பொருளிலும் இருக்கிறது. இறைவெளி என்ற தாத்தாவும், நிழல் விண் என்ற பேரனும் ஆடுகிற கூத்துத் தானே இவையனைத்தும்!

இறைவெளி புலன்களுக்கு எட்டாது இருந்ததனால் அதை விவரித்துச் சொல்ல முடியவில்லை. ஆனால், எப்படித் தத்துவஞானிகள் கண்டுபிடித்தார்கள்? மனம் சுழல் விரைவு அதிகமாயிருக்கிறபோது அது அலை. அலைக்கு அடித்தளமாக இருப்பது இறைநிலை. இறைநிலையிலிருந்து அலை விலகி நிற்கிற மாதிரி இருக்கும். ஆனால், மன அலைச் சுழல் விரைவு குறையக் குறைய, இறையுணர்வும் இறையாற்றலும் அந்த மனத்திற்கு வலுவைத் தருகின்றன. அப்படியே அந்த இறைநிலையோடு நெருங்கியிருக்கிறபோது, மனம் இறைநிலையைத் தெரிந்து கொள்கிறது.

இறைநிலையிலிருந்து தானே எல்லாமே வந்தன? எல்லா இயக்கங்களும், பதிவுகளும் வான்காந்தத்தில் தான் இருக்கின்றன. அதோடு மனம் இணைகிறபோது அங்கிருக்கக்கூடிய உண்மைகள் எல்லாம் தெரிகின்றன. நேற்று நடந்த செயலை நினைத்தால் நினைவிற்கு வருகிறது போலத் தனக்குள்ளாகவே பிரபஞ்ச இரகசியங்கள் தெரியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளி. மாவட்டத்தில் சிறுபோக நெல் மூடைகள் கொள்வனவு

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகளிடம் உள்ள சிறுபோக நெல்மூடைகள் வட்டக்கச்சி, கண்டாவளை ஆகிய இடங்களிலுள்ள நெல் சந்தைப்படுத்தும் சபை மூலமாக கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.**

இது தொடர்பில் தெரிய வருவதாவது, நடப்பாண்டில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயி ஒருவரிடம் இருந்து ஒரு கிலோ சம்பா நெல் 50 ரூபாவாகவும் , ஒரு கிலோ சிவப்பு நெல் 45 ரூபாவாகவும் நெல்மூடைகளாகக் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

நெல் சந்தைப்படுத்தும் சபையின் கொள்வனவு மையத்திற்கு நெல் மூடைகளை விவசாயிகள் எடுத்துச் செல்வதற்கு முன்னர், கமக்கார அமைப்பின் ஊடாக கமநலசேவை நிலையத்தில் வழங்கப்படுகின்ற நெல் கொள்வனவு படிவத்தைப் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரமானியக் கொள்வனவின் போது வழங்கப்பட்ட பற்றுச்சீட்டையும் இணைத்து நெல் சந்தைப்படுத்தும் கொள்வனவு மைய முகாமையாளரிடம் நேரடியாக ஒப்படைக்க வேண்டும்.

இதன் மூலம் ஒரு விவசாயியிடம் இருந்து 2 ஆயிரம் கிலோ கிராம் நெல்மூடைகள் நெல் சந்தைப்படுத்தும் சபையினரால் கொள்வனவு செய்யப்படுகிறது.

இதேவேளை நெல் கொள்வனவில் ஈடுபட்டு வந்த தனியாரும் இதுவரை குறித்த விலையில் பெற்றுக் கொண்ட நெல்மூடைகளை சற்றுக் கூடுதலான விலையில் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு நெல் சந்தைப்படுத்தும் சபையினர் நியாயமான விலையில் நெல்மூடைகளைக் கொள்வனவு செய்வது தமக்கு இலாபகரமானதாக இருப்பதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இத்தகைய ஒழுங்குகளை முற்கூட்டியே மேற்கொண்டிருந்தால் விவசாயிகள் மேலும் நன்மை அடைந்திருப்பார்கள் என தெரிவிக்கப்படுகிறது. இதேபோன்று அரிசி ஆலைகளை அமைத்துள்ள ப.நோ.கூட்டுறவு சங்கங்களும் நெல்மூடைகளை கொள்வனவு செய்வதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டால் தூர இடங்களில் உள்ள விவசாயிகளும் நெல்மூடைகளை கூடிய விலைக்கு விற்பனை செய்து இலாபமீட்ட முடியும்.

அத்துடன் நெல் கொள்வனவிற்கான கொடுப்பனவுகள் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளின் வைப்பிலிடப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (2-254)

## உரப்பைகளுக்கு தட்டுப்பாடு; சிறுபோக அறுவடை தாமதம்

**விவசாயிகள் சுட்டிக்காட்டு**

(கண்டாவளை)

கல்மடு, இரணைமடு ஆகிய நீர்ப்பாசன குளங்களின் ஊடாக 2015 ஆம் ஆண்டிற்கான சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டு தற்போது அறுவடைசெய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அறுவடைசெய்த நெல்லை சேகரித்து வைப்பதற்குரிய உரப்பைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அறுவடையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, சிறுபோக அருவி வெட்டு கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நிலையில் கடந்த காலங்களில் அறுவடைசெய்த நெல்லை உரப்பைகளில் இட்டு விவசாயிகள் சந்தைப்படுத்தினர். தற்போது உரப்பைக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதனால் விவசாயிகள் வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் சென்று தமக்கான உரப்பைகளை கொள்வனவு செய்து அறுவடை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அத்துடன் உரப்பைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதை அடுத்து சிறுபோக அறுவடை தாமதம் அடைவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (2-263)

## கற்களால் தாக்கப்பட்ட குடும்பஸ்தர் வைத்தியசாலையில்

இளைஞன் ஒருவன் குடும்பஸ்தர் மீது கற்களால் சரமாரியாகத் தாக்கியுள்ளான். இதனை அடுத்து அவர் முகத்திலும் தலையிலும் படுகாயங்களுக்குள்ளாகி மயக்கமடைந்த நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 5.30 மணியளவில் முள்ளியவளை பிரதான வீதியில் நடைபெற்றுள்ளது. இதில் முள்ளியவளையைச் சேர்ந்த தம்பிராசா செல்வராசா (வயது50) என்பவரே படுகாயம் அடைந்தவராவார். இது தொடர்பில் தெரியவருவதாவது, இருவரும் மேற்படி வீதியில் கதைத் துக்கொண்டிருந்த வேளை திடீரென்று குடும்பஸ்தரின் முகத்தில் பிரஸ்தாப இளைஞன் கற்களால் சரமாரியாகத்தாக்கியுள்ளான். இதன்போது அதிக இரத்தம் வெளியேறிய காரணத்தினால் அவர் மயக்கமுற்றநிலையில் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் அறிந்த முள்ளியவளை பொலிஸார் இளைஞரின் வீட்டிற்கு விரைந்தபோது கத்தியுடன் நின்றிருந்த இளைஞர் பொலிஸாரை தாக்கிவிட்டு தப்பியோடியுள்ளான்.

இதன்பின்னர் பொலிஸார் தேடுதல் நடத்தியபோதும் இளைஞர் தலைமறைவான நிலையில் மாலை 6.30 மணியளவில் குறித்த இளைஞர் ஓரிடத்தில் மறைந்திருப்பதாக கிடைத்த தகவலையடுத்து அவரை கைது செய்யும் நோக்கில் சுமார் 25 பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்தனர். பொலிஸாரை கண்டதும் மீண்டும் அவ் இளைஞன் தப்பியோடியுள்ளான். பொலிஸார் இளைஞனை தேடிவருகின்றனர். (2-302)

## திருட்டு முயற்சி கைகூடவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஜெயபுரத்தில் உள்ள மக்கள் வங்கியில் பெண் ஒருவர் தனது மூன்று வயது குழந்தையுடன் சென்று அண்மையில் பணத்தை மீளப்பெற்றுள்ளதை இளைஞன் ஒருவன் அவதானித்துள்ளான்.

இதனை அடுத்து அப்பெண் வங்கியிலிருந்து வெளியே வந்தபோது இளைஞனும் அப்பெண்ணை பின் தொடர்ந்தான். அதனைத் தொடர்ந்து பிரஸ்தாப பெண் தேநீர் கடையொன்றினுள் நுழைந்தபோது குறித்த இளை ஞன் அங்கும் இங்குமாக நடமாடித் திரிந்துள்ளான்.

அதன் பின்னர் அங்கு இருந்து ஏ-9 வீதியூடாக கிளிநொச்சி பொதுச் சந்தைக்குள் நுழைந்த பிரஸ்தாப பெண் அங்கு நின்றவர்களிடம் நடந்தவற்றை கூறினார்.

குறித்த இளைஞன் சந்தையில் நின்ற வியாபாரிகள் ஒன்று கூடுவதை அவதானித்தான்.

இதனைத் தொடர்ந்து அந்த இளைஞன் வேறு இரு இளைஞர்களுடன் இணைந்து முச்சக்கர வண்டியொன்றில் ஏறி அவ்விடத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளான். தப்பிச் சென்ற முச்சக்கர வண்டி கிளிநொச்சி மாவட்டத்தின் பதிவில் இவ்வாறான ஆசாமிகள் நகரில் நடமாடினால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்குவதன் மூலம் இதனைக் கட்டுப்படுத்த முடியும். (2-27)

### மாணவியின் பூதவுடல் தாங்கிய ஊர்வலத்தில்

## பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் முறுகல்; நீதிமன்ற உத்தரவையடுத்து அமைதி



க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படாமையால் தற்கொலை செய்து கொண்ட மாணவியின் பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டபோது பொலிசாருக்கும் மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இருப்பினும் நீதிமன்ற உத்தரவுக்கமைய அமைதியான முறையில் ஊர்வலம் இடம்பெற்று இறுதிக் கிரியைகள் நடைபெற்றன.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா, பண்டாரிகுளம் விபுலானந்த கல்லூரியைச் சேர்ந்த குணசேகரம் திவ்வியா (வயது 19) என்ற மாணவி கணித பாடத்தில் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையவில்லை எனத் தெரிவித்து பாடசாலை அதிபர் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டையை வழங்கவில்லை. இதனால் விரக்தி அடைந்த பிரஸ்தாப மாணவி கடிதம் எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இந் நிலையில், நேற்றைய தினம் இறுதிக் கிரியைகள் நடைபெற்றன. இதன் போது மாணவியின் பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பாடசாலையில் வைப்பதற்கு பொதுமக்கள் ஒழுங்குகள் மேற்கொண்டனர். இதனை பொலிஸார் தடுத்திருந்திருந்தனர். இந்நிலையில் இரு பகுதியினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

பாடசாலைக்குள் பூதவுடல் கொண்டு செல்ல முடியாது எனவும் பேரணியில் குழப்பம் விளைவிக்க முடியாது எனவும் பொலிஸார் ஊடாக நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததையடுத்து அமைதியான முறையில் பூதவுடல் வேப்பங்குளம், பண்டாரிகுளம், வைரவபுளியங்குளம் வீதி வழியாக கொண்டு வரப்பட்டு மன்னார் வீதி தட்சனாங்குளம் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

மாணவியின் பூதவுடல் பேரணியாக கொண்டு செல்லப்பட்டதையடுத்து பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டு சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

இதேவேளை, மாணவியின் இறுதிக் கிரியையில் அரசியல்வாதிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (2)




## போலியான பதவி முத்திரையைப் பயன்படுத்தி கையொப்பமிடப்பட்ட ஆவணங்கள் சிக்கின

கிளிநொச்சி நகரில் செயற்படும் சமாதான நீதவான் ஒருவரின் பதவி முத்திரையை அதே இடத்தில் இயங்குகின்ற சாரதி பயிற்சி நிலையத்தினர் போலியாக தயாரித்து சாரதி பயிற்சி பெறுகின்றவர்களின் ஆவணங்களுக்கு பயன்படுத்தி வந்தமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக பொதுமக்களை விழிப்பாக செயற்படுமாறு சமாதான நீதவான்கள் கேட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, சமாதான நீதவானிடம் சாரதி பயிற்சி பெறுகின்றவர்கள், தமக்கான அடையாள அட்டை பிரதி, பிறப்பு அத்தாட்சி பத்திரம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவது வழமையாகும். இந்நிலையில் மேற்படி நகரில் வசிக்கின்ற சமாதான நீதவான் ஒருவர் சில நாட்களாக தன்னிடம் குறித்த ஆவணங்களை உறுதிப்படுத்த வராமையை அடுத்து சம்பந்தப்பட்ட சாரதி பயிற்சி நிலையத்துடன் தொடர்பு கொண்டு கேட்டுள்ளார்.

அதற்கு அவர்கள் வேறொரு சமாதான நீதவான் ஒருவரிடம் இருந்து குறித்த ஆவணங்களை சம்பந்தப்பட்ட நபர்கள் உறுதிப்படுத்தி கையொப்பமிட்டு கொண்டு வருவதாக கூறியுள்ளனர்.

எனினும் இவர்களின் கருத்தில் சந்தேகம் கொண்ட அவர் கிளிநொச்சி மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்து பிரிவுடன் தொடர்பு கொண்டு தமது பிரச்சினையைத் தெரியப்படுத்தியுள்ளனர். இதையடுத்து குறித்த சாரதி பயிற்சி நிலையத்தினால் போலியாக தயாரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்ட ஆவணங்கள் சிக்கின. இதனால் சம்பந்தப்பட்ட சாரதி பயிற்சி நிலையத்தினருடன் தொடர்பு கொண்டு விளக்கம் கோரப்பட்டுள்ளது. எனவே சாரதி பயிற்சி பெறு வோர் இவ்வாறான விடயங்களில் அவதானமாகச் செயற்படுமாறு கேட்கப்படுகின்றது. (2-277)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதியுடன்...

பதவி ஏற்றதும் நான் சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை வழங்கினேன்.

இந்த நாட்டு மக்கள் ஜனாதிபதியை மட்டுமே மாற்றினார்கள், பிரதமரையோ அமைச்சரவையையோ கிடையாது. எனினும், ஜனாதிபதியாக பதவி ஏற்று இரண்டு நிமிடங்களில் பாய்ந்து கொண்டு ரணில் பிரதமராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

அங்கு எமது பிரதமர் பார்த்துக்கொண்டிருந்தார், அவருக்கு தெரியாது அவர் பதவி விலக்கப்பட்டமை குறித்து. ரணில் பிரதமராக பதவியேற்று என்ன செய்தார், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களை பழி வாங்கினார்.

உண்மையாகவே கூறுகின்றேன். கட்சித் தலைமைப் பதவியை பெற்றுக் கொள்ளும் உத்தேசம் எதுவும் கிடையாது. மைத்திரியுடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்போம் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (எ-12)

## மகிந்தவை...

கான உதவிகளை செய்வதற்கு ஆயத்தம் என ஹென்தாவிதாரண குறித்த புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

ஹென்தாவிதாரண கடந்த அரசாங்கத்தின் போது மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கியதோடு மற்றும் ராஜபக்ஷ குடும்பத்துக்காக இரகசியமாக செயற்பட்டவர், அத்துடன் மகிந்தவுக்காக தனது அதிகாரத்தை பயன்படுத்திய நபர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-12)

# ஓவல் டெஸ்டில் மீண்டும் அண்டர்சன்



அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ஓவல் டெஸ்டில் மீண்டும் இங்கிலாந்து அணியில் வேகப்புயல் ஜேம்ஸ் அண்டர்சன் இணைக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது.

இதுவரை முடிந்துள்ள 4 போட்டிகளில் இங்கிலாந்து மூன்று போட்டியில் வெற்றி பெற்று தொடரை 3:1 எனக் கைப்பற்றி முன்னிலையில் உள்ளது. பேர்மிங்காமில் நடைபெற்ற 3ஆவது டெஸ்டில் இங்கிலாந்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றிக்கு அந்த அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன் முக்கிய பங்கு வகித்தார்.

ஆனால் அந்த டெஸ்டின்போது அவருக்கு இடுப்புப் பகுதியில் காயம் ஏற்பட்டது. இதனால் நொட்டிங்காமில் நடைபெற்ற 4ஆவது டெஸ்டில் இருந்து விலகினார். தற்போது அவரது காயம் குணமடைந்து வருவதால் ஐந்தாவது போட்டிக்கான இங்கிலாந்து அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். ஐந்தாவது போட்டி வருகிற 20ஆம் திகதி தொடங்குகிறது. இதில் அண்டர்சன் கலந்து கொண்டால் பிரோட், அண்டர்சன் கூட்டணி அவுஸ்திரேலிய துடுப்பாட்டக்காரர்களை மேலும் அச்சுறுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

# சங்கக்காரதான் சிறந்த துடுப்பாட்ட வீரர் மஹேல ஜெயவர்த்தன புகழாரம்

இலங்கை அணி சர்வதேச போட்டிகளில் விளையாடிய நாளில் இருந்து இந்நாள் வரையான துடுப்பாட்டக்காரர்களில் குமார் சங்கக்காரதான மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்று ஜெயவர்த்தன புகழாரம் சூட்டியுள்ளார். இலங்கை அணியில் விக்கெட் காப்பாளராக களமிறங்கிய சங்கக்கார, பின்னர் தலைசிறந்த துடுப்பாட்டக்காரராக மாறினார். அவர் டெஸ்ட் போட்டியில் 12 ஆயிரம் ஓட்டங்களுக்கு மேலும், ஒருநாள் போட்டியில் 14 ஆயிரம் ஓட்டங்களுக்கு மேலும் குவித்துள்ளார்.

தற்போது இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப் பயணம் செய்துள்ளது. மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் இரண்டு போட்டிகளில் விளையாடிய பின் சங்கக்கார சர்வதேச போட்டிகளில் இருந்து விடைபெறுகிறார். காலி டெஸ்டின் இறுதியில் சங்கக்காரவுக்கு சிறப்பான வழியனுப்பும் விழா நடத்த இலங்கை கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

இவரது ஆட்டம் குறித்து அந்த அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் ஜெயவர்த்தன கூறியதாவது, இலங்கை அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரர் யாரென்று கேட்டால், குமார் சங்கக்காரதான் என்று நான் ஒளிவுமறைவின்றி சொல்லுவேன். நான், அரவிந்த டி சில்வா ஆகியோர் சிறந்த துடுப்பாட்டவீரர்கள்தான். இருந்தாலும், ஏராளமான சாதனையை உருவாக்கியவர் சங்கக்கார. சர்வதேச போட்டியில் ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகள் மூலம் 60க்கும் மேற்பட்ட சதங்களை விளாசியுள்ளார். இது மிகவும் மலைக்கவைக்கும் எண்ணிக்கை என்றார்.




பாராளுமன்ற தேர்தல் - 2015

யாழ். தேர்தல் மாவட்டம்



6

சவால்களைச் சாத்தியமாக்கவும் கனவுகளை நிஜமாக்கவும் மாற்றத்துக்காய் வாக்களிப்போம்

வைத்தியர்

இ.சிவசங்கர் (MBBS)

யாழ்.போதனா வைத்தியசாலை

ஐக்கிய தேசியக் கட்சி

(சி-427)


## அரசியல் கைதிகள்...

ச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ, அவர்களை அரசியல் கைதிகள் என கருத முடியாது என்று கூறியுள்ளார்.

ஆனால், விடுதலைப்புலிகள் என்று சந்தேகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை அரசியல் கைதிகளாகத்தான் கருத வேண்டும். சில நாட்களுக்கு முன்னதாக முன்னாள் இராணுவ தளபதியும், ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா கூறியிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-12)

## புலிகளுக்கு பணம்...

நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசிய முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

ராடா நிறுவனத்தின் பிரதானிகளாக இருந்த டிரான் அலஸ் மற்றும் எமில்காந்தன் ஊடாக மகிந்த ராஜபக்ஷ, திறைசேரியில் இருந்து 8 ஆயிரம் லட்சம் பணத்தை விடுதலைப் புலிகளுக்கு வழங்கினார்.

இது தொடர்பான சகல தகவல்களும் என்னிடம் உள்ளன எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்தால், நாடு சமஷ்டி நாடாக மாறும் எனவும் அரச நிறுவனங்கள் தனியார்மயப்படுத்தப்படும் எனவும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்தாலேயே அவ்வாறான ஆபத்து ஏற்படும் எனவும் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (எ-12)

## யுத்த வெற்றிகளுக்கு...

அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்த காலத்தில்தான் ஜனாதிபதியாக இருந்த போதுதான் யாழ்ப்பாணம் மீட்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருக்கும்பொழுது கிழக்கின் பல பகுதிகள் மீட்கப்பட்டன. அதன் பின்னர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வடக்கு கிழக்கு புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டது.

யுத்த வெற்றியில் மகிந்த ராஜபக்ஷவுக்கு மட்டும் உரிமை கிடையாது. இறுதிக் கட்ட யுத்தம் வென்றெடுக்கப்பட்டதில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு முக்கிய பங்கு உண்டு. யுத்த வெற்றிக்காக மக்கள் மகிந்தவுக்கு வாக்களித்தால் தமக்கும், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கும் கூட மக்கள் வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-12)

## ரணிலின்...

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அமைச்சரவைக் கூட்டங்களுக்கு தொடர்ந்தும் சமுகமளித்து வந்தார்.

இறுதியான அமைச்சரவைக் கூட்டம் எவ்விதமான சுவாராஸ்யமும் இன்றி முடிவடைந்தது. அமைச்சரவைக் கூட்டத்தின் இறுதியில ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உணர்ச்சிபூர்வமான உரைய்ய நிகழ்த்தினார்.

அனைவரும் வெற்றி பெற வேண்டும் என பிரார்த்திக்கின்றேன். எதிர்வரும் 18ஆம் திகதி இதே அமைச்சரவையை சந்திக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு.

ஜனவரி 8ஆம் திகதி பெற்ற வெற்றியை முன்னோக்கி கொண்டு செல்லக் கூடிய அமைச்சரவை தெரிவாக வேண்டும் என பிரார்த்திக்கின்றேன். அனைவருக்கும் வாழ்த்துக்கள் எனக் கூறி ஜனாதிபதி தனது உரையை முடித்து கொண்டார். (எ-12)

## அரசுடன்...

என்பதால், கவனமாக செயற்பட வேண்டியுள்ளது என்று இலங்கை அரசாங்கத்தரப்பு தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே புண்பட்ட இதயங்களையும் மனங்களையும் ஆற்றுப்படுத்தி நல்லிணகத்தை ஏற்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளமையையும் அரசாங்கத்தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (எ-12)


CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச் சந்தை முதலீட்டு உத்திகள் பயிற்சிப் பட்டறை

துறைசார் அனுபவமுடைய வளவாளர்களினால் கருத்துக்கள் பரிமாற்றப்படும்.

- பங்குச் சந்தை முதலீடுகள் அறிமுகம்.
- நிதிக் கூற்றுக்களை விளங்கிக் கொள்ளல்.
- பங்குத் தெரிவுகள்.
- பங்குகளில் முதலீடு செய்தல்.

2015 ஆவணி 15 மற்றும் 22 ஆம் திகதி சனிக்கிழமைகளில்
(மு.ப 9.30- பி.ப 4.30) (முதலீட்டு கைநூல் மற்றும் மதிய உணவு வழங்கப்படும்)
பதிவுக் கட்டணம் ரூபா 500)

147-2/3, கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள [illegible]
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை யாழ்.கிளையில் நடைபெறும்.

முற்பதிவுகளுக்கு:-021 222 1455, 0777822014,
www.cse.lk

(சி-1782)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்ஜ் வோக்கர் அறிமுக அரைசதம்

## நியூசிலாந்து இலகுவான வெற்றி

ஜோர்ஜ் வோக்கரின் அறிமுக அரைச் சதம் கைகொடுக்க சிம்பாப்வே அணிக்கு எதிரான ஒரேயொரு போட்டியைக் கொண்ட இருபது-20 தொடரை நியூசிலாந்து அணி 80 ஓட்டங்களால் இலகுவான வெற்றியைப் பெற்று கைப்பற்றியது. இடதுகை துடுப்பாட்டக்காரரான வோக்கர், வலதுகை துடுப்பாட்டக்காரர்களான கப்ரில், ரோஞ்சி ஆகியோருடன் இணைந்து 2ஆவது, 4ஆவது விக்கெட் இணைப்பாட்டத்தில் தலா 49 ஓட்டங்களை பகிர்ந்தமை போட்டியின் சிறப்பம்சமாக அமைந்தது.

சிம்பாப்வேயின் ஹராரே விளையாட்டுக்கழக மைதானத்தில் நடந்த இப்போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி, ஜோர்ஜ் வோக்கரின் அறிமுக அரைச்சதத்தின் உதவியுடன் 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் வோக்கர் 38 பந்துகளில் 3 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக 62, கப்ரில் 33, ரோஞ்சி 29 ஓட்டங்களை எடுத்தனர்.

199 ஓட்டங்கள் என்ற கடின வெற்றியிலக்கை நோக்கி துடுப்பாடக் களமிறங்கிய சிம்பாப்வே அணியால், நியூசிலாந்து பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டங்களை மாத்திரமே எடுக்க முடிந்தது.

துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக ஏர்வின் 43 ஓட்டங்களை எடுத்தார். இப்போட்டியில் 80 ஓட்டங்களால் வெற்றியீட்டிய நியூசிலாந்து அணி ஒரேயொரு போட்டியைக் கொண்ட இருபது-20 தொடரை 1:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

போட்டியின் ஆட்டநாயகனாக நியூசிலாந்தின் வோக்கரும், தொடரின் சிறப்பாட்டக்காரராக சிம்பாப்வே அணியின் ஏர்வினும் தெரிவாகினார்.























இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org